# கி. பாகிஸ்தான் எதிர்ப்பை சமாளிக்க பாரசூட் துருப்புக்கள்

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 13
இதழ் 48
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பங்குனி 16 ஸபர் 2 செவ்வாய்க் கிழமை 30-3-71)

புதுடில்லி, மார்ச் 29 கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள டாக்கா வானொலி நிலையத்தைக் கைப்பற்ற சேக்முஜிபுரின் ஆதரவுப் படைகளுக்கும், அரசுப் படைகளுக்குமிடையே கடும் சண்டை நடைபெறுவதாக அங்கிருந்து வந்ததாகச் சொல்லப்படும் ஒரு செய்தி கூறுகிறது.

இந்தச் செய்தியை ஊர்ஜிதப்படுத்தும் வகையில் டாக்கா வானொலி பிற்பகல் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பவில்லை. டாக்கா வானொலி பிற்பகல் 2 மணிக்குத் தன் பிற்பகல் நிகழ்ச்சிகளை வழமையாக ஒலிபரப்பும். ஆனால் அது அரை மணி நேரம் முன்பாகவே தனது ஒலிபரப்பை நிறுத்திக்கொண்டது. அது தனது ஒலிபரப்பை நிறுத்துவதற்கு முன்பு குர்ஆனிலிருந்து வாசகங்களை ஒலிபரப்பியது.

பாதைகளும், பாலங்களும் சுதேசிப் படைகளினால் தகர்க்கப்பட்டதினால் சிட்டகாங் பகுதிகளில் அரசுப் படைகள் தமது துருப்புக்களை ஹெலிகாப்டர் மூலம் இறக்குவதாக வங்காள சுதந்திர வானொலி எனக் கூறிக்கொள்ளும் இரகசிய வானொலிச் செய்தியொன்று தெரிவித்தது. அரசாங்கப் படை

(8-ம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடு இருப்பதால்

# ஆனையிறவுக்கப்பால் சீமெந்து கொண்டுபோகத் தடை

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ்ப்பாணத்தில் சீமெந்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், ஆனையிறவு தடை முகாமுக்கு அப்பால் சீமெந்து கொண்டுசெல்வது நேற்று முதல் தடை செய்யப்பட்டுள்ளது. பெர்மிட் உள்ளவர்கள்மட்டும் சீமெந்து கொண்டுசெல்ல முடியும்.

சீமெந்துக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் கூடிய விலைக்கு விற்கப்படுவதாகவும், பலர் புகார் செய்ததைத் தொடர்ந்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகரா, வடபகுதி பொலிஸ் அதிபதி திரு ஆர் சுந்தரலிங்கம் ஆகியோர் இதுபற்றி ஆலோசனை செய்தபின், இம் முடிவு எடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்திலுள்ள வியாபாரிகள் சிலர் காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலையில் சீமெந்து பாக்கட்டுக்களை வாங்கி கொழும்பிலிருந்துவரும் வியாபாரிகளுக்கு கூடியவிலைக்கு விற்பதாகவும் புகாரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

கொழும்பில் உள்ளவர்கள் பெர்மிட் வைத்திருந்தால் மட்டுமே, ஆனையிறவு தடை முகாமிற்கு அப்பால் சீமெந்து கொண்டுசெல்ல முடியும்.

## இன்று

யாழ்ப்பாணம், செவ் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலய 9-ந் திருவிழாவான இன்று புதிய கைலாசவாகன வெள்ளோட்ட வைபவம் நடைபெறும் இரவு "சுந்தரரும் மணிவாசகரும்" என்னும் பொருள்பற்றிய பிரசங்கமும் இன்னிசைக்கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

## 25வது மகாஜன சீட்டிழுப்பு

கோட்டை, திங்கள் 25வது மகாஜன சம்பத சீட்டிழுப்பு இம்மாதம் 31-ந் திகதி பிற்பகல் 5 மணிக்கு கல்கிசை மவுண்ட்பார்க்கில் நடைபெறவுள்ளது.

கல்கிசை-தெகிவளை நகரசபைத்தலைவர் மேஜர் எல் வி. குணரட்ண தேசியக் கொடியை ஏற்றிவைப்பார்.

தெகிவளை எம் பி. திருமதி விவியன் குணவர்த்தன 1வது பரிசுக்குரிய டிக்கட்டையும், நொட்டா எம். பி. சந்திரகுணசேகர 2வது பரிசுக்குரிய டிக்கட்டையும் தெகிவளை - கல்கிசை நகரசபை உறுப்பினர் கே கே ஈ. பிறிட்டோ 3வது பரிசுக்குரிய டிக்கட்டையும் எடுப்பார்கள்.

## இலங்கை கலைஞர்களுக்கு பாலச்சந்தர் பாராட்டு

(மாவிட்டபுரம் நிருபர் - கு. வி. ம)

இலங்கைக் கலைஞர்கள் இந்தியக் கலைஞர்களுக்கு சளைத்தவர்களல்லவர் அவர்களுடன் எனக்குரிய பரிச்சயம் மிக இறுக்கமானது. அதுவும் யாழ்ப்பாணப்பகுதியிலுள்ள கலைஞர்களை நாலு தடவை யாழ்ப்பாணத்துக்கு வந்ததன்மூலம் நான் அறிந்துள்ளேன்"

இவ்வாறுதென்னிந்திய சினிமாத்தயாரிப்பாளர், டைரக்டரும், உலகபுகழ்வீணை வித்துவானுமாகிய திரு எஸ் பாலச்சந்தர் தெரிவித்தார்

இன்றுமாலை பலாலி விமானநிலையத்தில் வந்திறங்கிய திரு பாலச்சந்தரை இலங்கைக் கலைஞர்கள் கோஷ்டி

(8-ம் பக்கம் பார்க்க)



## "அவசரகாலநிலையைநீக்கி பிரச்சினையை தீர்க்குக"

### செனட்டில் ராஜரத்ன கோரிக்கை

கொழும்பு, திங்கள் அரசாங்கம் 350 சேகுவேரா இயக்கத்தினரைக் கைதுசெய்துள்ளதாக அறிவித்துள்ளது உண்மையில் 3500க்கு மேற்பட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் வேலையில்லாத இளைஞர்கள் தங்கள் பிரச்னைகளைத்தீர்க்குமென நம்பி இந்த அரசாங்கத்தைப் பதவிக்குகொண்டு வந்தனர்' ஆனால் விலைவாசி உயர்வும் வேலையில்லாத் திண்டாட்டமும் தீர்க்கப் படாமையால் அவர்கள் அரசாங்கத்தின்மீது வெறுப்படைந்துள்ளனர்

இவ்வாறு செனட்டர் கே. எம் பி ராஜரத்தின செனட்டில் கூறினர்.

அவசரகாலநிலைமை பற்றி இன்று செனட்டில் தொடர்ந்து விவாதம் நடைபெற்ற போது ராஜரத்தின மேலும் பேசியதாவது:-இப்பொழுது அரசாங்கத்தினால் கைதுசெய்யப்பட்டுள்ள உதவியற்ற இளைஞர்கள் சிறையில் வாடுகின்றனர். அவர்களுக்காக சட்ட நியுணர்களோ பெற்றோர்களோ உதவிபுரிய அனுமதிக்கப்படவில்லை' இந்த அரசாங்கத்தில் இருக்கும் பெரும் சோஷலிசத்தலைவர்களைப்போல சாதாரணமாக மா ஓ. சேகுவேரா வேலையில் ஈடுபட்டவர்களும்கைது செய்யப்பட்டுள்ளனர். சேகுவேரா இயக்கத்தை இராணுவ அதிகாரத்தினால் அடக்கிவிடமுடியாது இந்த இயக்கம் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் பரவியுள்ளது. இந்த அரசாங்கத்தை பதவிக்கு கொண்டுவந்த படித்த ஆனால் வேலையற்ற வாலிபர்களே இவ்வியக்கத்தில் இருக்கின்றனர் என்று கூறியஅவர் இந்த அவசரகால நிலைமையை நீக்கி, நாட்டிலுள்ள பிரச்னைகளைத் தீர்க்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டார்.

அரசின் கொள்கையைஆதரித்து திரு டி ஜி பி வில்லியம் பேசுகையில், இவ்விதமான சூழல்களில் எந்த நிர்

(8-ம் பக்கம் பார்க்க)

பருத்தித்துறை தேர்தல்வழக்கு

## தொகுப்புரை 3ம் திகதி

கொழும்பு, திங்கள் கொழும்பில் விசாரிக்கப்பட்டுவந்த பருத்தித்துறை தேர்தல் ஆட்சேப மனு மீதான விசாரணையில் மனுதார் சாட்சியங்கள் முடிவடைந்தன ஏப்ரல் 3ம் திகதி தொகுப்புரை இடம்பெறும்.

## சேமமடு கொலை வழக்கு

யாழ்ப்பாணம், செவ் சேமமடு கொலை வழக்கு நேற்று நான்காவது தினமாக வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வீரமந்திரி முன்னிலையில் விசாரணைசெய்யப்பட்டது. ஜெயராசசிங்கம் சாட்சியளித்தனர்.

இவ் வழக்கில் சேமமடுவில் 69-ம் ஆண்டு மே மாதம் 5-ம் திகதி நடராசா யோகராசா ஆகியோர் ரி. காசிப்பிள்ளையை கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ளனர்.

[illegible] நடைபெறுகிறது.

## மரண அறிவித்தல்

### இரத்தினம்மா காரளசிங்கம்

காலஞ்சென்ற மு இ. காராளசிங்கம் ஜே.பி. யூ எம்., கிரவுண்பிறக்ரர் அன் நொத்தாரிசு அவர்களின் மனைவியும், ஸ்ரீரஞ்சனி, பூலோகசுந்தரம், அனசூயா, யோககுமாரன் ஆகியோரின் தாயாரும், கலாநிதி க பூலோகசுந்தரம் அவர்களின் மாமியும், கமலாம்பிகை பசுபதியினதும், மகேஸ்வரி ஸ்ரீகந்தாவினதும். காலஞ்சென்ற ஆயுள்வேதடாக்டர் கதிரவேற்பிள்ளையினது சகோதரியும், கலாநிதி வி.ரி பசுபதியினதும், ம.ஸ்ரீகந்தாவினதும் மைத்துனியும், காலஞ்சென்ற ஆயுள்வேத வைத்தியர் கஸ்தூரி முத்துக்குமாருவின் மகளுமான இரத்தினம்மா காராளசிங்கம் சிவபதமடைந்துவிட்டார்.

அவரின் பூதவுடல் கோம்பயன்மணல் மயானத்தில் தகனக்கிரியைக்காக இன்று மாலை 4-30 மணியளவில் வாசஸ்தலமான வண்ணார்பண்ணை காங்கேசன்துறை ரோட்டு, 361ம் இலக்கத்திலிருந்து எடுத்துச்செல்லப்படும். 6105

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாகம்ம்ஸ் சினிமா**
கல்லாகம்
தினசரி 2-30, 6-30, 9-45
நஞ்சன் - ராஜகுமாரி
நடித்த
**சந்திரலேகா**

**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி 2 30, 6-30, 9-30
ராஜன் - சௌகார் ஜானகி
நடித்த
**துணைவன்**

**ராணி**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
**ராமன் எத்தனை ராமனடி**

இன்னும் சில தினங்களுக்கு மட்டும்
**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி
முத்துராமன் - நிர்மலா
நடித்த
**வீட்டுக்கு வீடு**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
**எங்க வீட்டுப்பிள்ளை**

இன்னும் சில தினங்கள் மட்டும்
கெப்பிட்டல் (கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு)
சிவாஜி காஞ்சனா
நடித்த
**சிவந்த மண்**

வெகு விரைவில்
சினிமாஸ் திரைகளில்
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
**மூன்றெழுத்து**
(கலர்ப்படம்)


## யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி

மாவிட்டபுரம், திங்கள்

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் மோதிய சிநேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் யாழ்ப்பாணக் கல்லூரி 35 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 74 ஓட்டங்களையும் 2-ம் ஆட்டத்தில் 76 ஓட்டத்தையும் பெற்றது.

யூனியன் கல்லூரி துடுப்பெடுத்தாடி முதலாம் இன்னிங்சில் 76 ஓட்டங்களையும் 2-ம் இன்னிங்சில் 39 ஓட்டங்களையும் பெற்றதால் யாழ்ப்பாணக் கல்லூரி வென்றது.

யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடந்த இப்போட்டிக்கு ஏ. சேவியர், எஸ் தனபாலசிங்கம் ஆகியோர் மத்தியஸ்தம்வகித்தனர்.

......

## குளிர்த்தி விழா

சுழிபுரம், திங்கள்

வடலியடைப்புபாரத்தனை ஐயனார் கோவில் குளிர்த்தி அபிஷேக ஆராதனைகள் இன்று காலை நடைபெற்றன. பகல் அன்னதானமும் இரவு கூட்டுப்பிரார்த்தனை. பிரசங்கம் தவில் மற்றும் இன்னிசைக் கச்சேரிகள் நடைபெற்றன.


**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
Daily 10-30& 4 30.p.m.
RACHAEL RACHAEL

6-30, 10-00 மணி
ஜெய்சங்கர்-விஜயகுமாரி
நடித்த
**ஜீவனாம்சம்**

**ஸ்ரீ காலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
**அடிமைப்பெண்**

REGAL - Jaffna
Daily 3 shows
Steeve McQueen
Faye Dunaway
in
THE THOMAS
CROWN AFFAIR
Colour]


## கிரிக்கெட்

சுழிபுரம், திங்கள்

சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகக் கோஷ்டிக்கும் இளைஞர் தெங்கு பொருட்சாலை கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக் கழகத்தினர் இனிங்ஸால் வெற்றி பெற்றனர் பண்டத்தரிப்பு வை எம் சி ஏ கோஷடிக்கும், சித்தன்கேணி இளைஞர் முன்னேற்றக்கழகக் கோஷ்டியினருக்குமிடையே நடைபெற்ற போட்டியில் பண்டத்தரிப்பு வை எம் சி ஏ கோஷ்டியினர் இனிங்ஸால் வெற்றி பெற்றனர்.

—

## பாடசாலை மெய்வல்லுனர் போட்டி

மாங்குளம், திங்கள்

மாங்குளம் அரசினர் தமிழ் கலவன் வித்தியாலய இல்லங்களின் மெய் வல்லுநர் போட்டி மேற்படி வித்தியாலய விளையாட்டுத் திடலில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு டபிள்யூ ஆர் அருளையா தலைமையில் நடைபெற்றது. இம்முறை முதன் முதலாக நடைபெற்ற இவ் இல்லப் போட்டியின் பின்னர் வட்டாரக் கல்வி அதிகாரி பரிசுகள் வழங்கும் பொழுது போட்டியை சிறந்த முறையில் நடத்திய ஆசிரியர் ஆ சண்முகரத்தினத்தையும் போட்டிக்கு பரிசுகள் கொடுத்து உதவிய பெற்றோர்கள் வர்த்தகர்களையும் விளையாட்டு மைதானத்தின் மூலம் திருத்திய மாணவர்கள் முயற்சியையும் பாராட்டினர்.

பாரதி இல்லம் முதலாவதாகவும் வள்ளுவர் இல்லம் இரண்டாவதாகவும், நாவலர் இல்லம் மூன்றாவதாகவும் தெரிவு செய்யப்பட்டன.

## புதிய வீதி திறப்பு விழா

யாழ்ப்பாணம், செவ்

உடும்பிராய் முதலாம்வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய வீதித் திறப்பு விழா அடுத்த மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ளது. இவ்வீதிக்கு வே க செல்லத்துரை வீதி எனப் பெயரிடப்படவுள்ளது இவ் வைபவத்தில் கோப்பாய் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு எஸ் கதிரவேலுப்பிள்ளை கோப்பாய் கி ச தலைவர் ரி பரமானந்தராசா கோப்பாய் காரியாதிகாரி திரு வ கந்தப்பிள்ளை உட்படப்பலர் உரையாற்றவுள்ளனர். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு கே நவலநாதன் வீதியை திறந்து வைப்பார்.

## வரி விளம்பரம்

### தேவை

தையல் வேலைகளில் அனுபவமுள்ள பெண், பொறுப்பதிகாரியாக கடமையாற்ற உடன் தேவை. ரொக்கப் பணம் ரூ 1000/- விளம்பர இல 2738, C/o 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2738

றெடிமேட் சூட்ஸ் விற்பனை செய்வதற்கு அனுபவமுள்ள ஒருவர் உடன் தேவை. பிணைப்பணம் ரூ. 2000/-. மாதச் சம்பளம்; கமிஷன்; விளம்பர இல 2739, C/o "ஈழநாடு", யாழ்ப்பாணம். 2739

இலற்றிக் வெல்டிங் செய்யும் அனுபவமிக்க ஒருவர் தேவை நற்சாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும். கிருஷ்ணபிள்ளை, மோட்டார் உதிரிப்பாக விற்பனையாளர், 591, கே கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2736

## புங்குடுதீவு மகாவித்தியாலயம் முதலிடம்

ஊரதீவு, திங்கள்

புங்குடுதீவு பாடசாலைகளுக்கிடையே நடைபெற்ற விளையாட்டுப்போட்டியின் இறுதித் தேர்வின்போது புங்குடுதீவு மகாவித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளது. இரண்டாவது இடத்தை புங்குடுதீவு றோமன் கத்தோலிக்கப் பாடசாலையும் மூன்றாவது இடத்தை வல்லன் ஸ்ரீ சண்முகநாத வித்தியாசாலையும் பெற்றுள்ளது

புத்தூரில்

## இந்திய சேலைகள் சிக்கின

புத்தூர், திங்கள்

புத்தூரில் சுமார் 40000 ரூபா பெறுமதியான காஞ்சிபுரம், மணிப்புரி சேலைகள் ஒரு வீடொன்றில் இருந்து கைப்பற்றப்பட்டுள்ளன

அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. கே கிருஷ்ணராசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி ஒன்றே மேற்படி வீட்டிலிருந்து பெறுமதி வாய்ந்த இந்த இந்திய சேலைகளைக் கைப்பற்றியது. இதுசம்பந்தமாக பொலிசார் ஒருவரைக் கைது செய்து காங்கேசன் துறை சுங்கப் பகுதியினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### செவ்வாய் 30—3—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

**344 மீ அன் 61 மீ**

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமிய நற்சிந்தனை, 6-35 திதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ அன் 49 மீ**


பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

**344 மீ அன் 61 மீ**

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு, 4-45 சங்கமம், 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 பிறநாட்டுப்பாடல்கள், 7-00 உரையாடல், 7-15 நாளவாத்தியக்கச்சேரி, 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தித் தொகுப்பு.


ஒரு கல்லில் செதுக்கியுள்ள வாக்கியங்கள் ஒரு சிறுவனின் வாழ்க்கையில் கண் கூடாகப் பலிக்கும் கதை
**வின்ஸர் வெண்திரையில்**
திரையிடப்படுகிறது!



தினசரி 4 காட்சிகள்
மாஸ்டர் பிரபாகர், பேபி சுமதி,
லட்சுமி, மனோரமா,
வி.எஸ்.ராகவன், சுருளிராஜன்,
சீர்காழி கோவிந்தராஜன்
நடிக்கும்
**வா ராஜா வா**
(ஈஸ்ட்மன் கலர்)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கிழக்குப் பாகிஸ்தானில்

# அமைதி திரும்புகிறதாம்! ஆட்சியாளர் கூறுகின்றனர்

## சண்டை நீடிப்பதாக இரகசிய வானொலி அறிவிக்கின்றது

புதுடில்லி, மார்ச் 29

**கிழக்குப் பாகிஸ்தானில் முக்கிய நகரங்கள் அனைத்திலும் அமைதி நிலவுவதாக பாகிஸ்தான் வானொலி அறிவித்துக்கொண்டிருக்கும் அதேசமயம் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியா வழியாகக் கிடைக்கும் மறுச் செய்திகளின்படி டாக்காவிலும் இதர நகரங்களிலும் தொடர்ந்து சண்டை நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவே தெரிகின்றது.**

**ஷேக் முஜிபுர் ரஹ்மானின் அவாமி லீக்கிற்குத் தடைவிதிக்கப்பட்டிருப்பதால் அந்தக் கட்சியில் அங்கம் வகிப்பதையும் பதவி வகிப்பதையும் அதன் பேரில் வங்கிகளில் பணம் வைத்திருப்பதையும் ராணுவ ஆட்சியாளர் சட்டவிரோதமாக்கியிருக்கின்றனர்**

டாக்காவிலும் இதரநகர்களிலும் அமைதிதிரும்பிக்கொண்டிருக்கின்றது. குறிப்பாக டாக்காவில் இன்று காலை 7 மணியிலிருந்து மாலை 5 மணிவரை ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்படுகிறது குல்னுநகரில் மாத்திரம் நேற்று சிறு கும்பல் ஒன்றைக் கலைக்கவேண்டியிருந்தது என்று ராணுவ ஆட்சியாளர் அறிவித்துள்ளனர்.

ஆனல் கிழக்குப் பாகிஸ்தானிலும் டாக்காவிலும் தொடர்ந்து மோதல்கள் நடைபெறுவதாகவே மற்ற செய்திகள் கூறுகின்றன

மேற்குப் பாகிஸ்தான் படைகள் முன்கூட்டியே திட்டமிட்டு கோரத்தனமான தாக்குதல்களை நடத்தியதாக கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து வெளியேறியிருக்கும் பி. பி. ஸி நிருபர் ஒருவர் தெரிவித்திருக்கிறுர்: இக்கோரமான தாக்குதல்களில் அப்பாவிகளான கிழக்கு பாகிஸ்தானியர் 5000 அல்லது 7000 பேர் வரை பலியாகியிருக்கிறுர்களென்று இன்னெரு நிருபர் அறிவிக்கிறுர்.

கடுமையான செய்தித் தணிக்கை அமுலிலிருப்பதால் சரியான நிலைமையை அறிந்துகொள்வது கஷ்டமாகவிருக்கின்றது;

கிழக்குப் பாகிஸ்தான் இரகசிய வானெலி யொன்று ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு விசுவாசமான தொண்டர் படையினர் ஒரு நகரை ராணுவத்திடமிருந்து கைப்பற்றிக்கொண்டுவிட்டதாகக் கூறுகின்றது.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் எங்கிருக்கிருர் என்ற தகவல் இன்னமும் சரியாகத் தெரியவில்லை

அவர் கைதுசெய்யப்பட்டுவிட்டதாக பாகிஸ்தான் றேடியோ முன்னர் அறிவித்தது. ஆனல் அவர் தலைமறைவாகிவிட்டதாகவே பொதுவாகக் கருதப்படுகின்றது.

அவர் இந்தியாவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்று ஒரு ஊர்ஜிதமற்ற செய்தி கூறுகின்றது. அதே வேளையில் மறைவாகஇருந்தபடி ராணுவ ஆட்சிக்கு எதிராகஅவர் மக்களை ஏவிவருகிருரென்றும் சொல்லப்படுகின்றது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைசேர்ந்தகுழுஒன்று பாகிஸ்தானுக்குப் புறப்பட்டிருக்கிறது கிழக்குப்பாகிஸ்தான் நிலைமைகளைக் கண்டறியப்புறப்பட்டிருக்கும் இக்குழுவினர்முதலில் கராச்சிக்குப் போய் அங்கிருந்து டாக்காவுக்குப் போக முயற்சி செய்வார்கள்

### ஆஸ்பத்திரிமீது குண்டுவீச்சு

பாகிஸ்தான் ராணுவ டாங்கிகள் டாக்கா பல்கலைக் கழகத்தை நாசம்செய்து விட்டதாகவும் ராணுவ விமானங்கள் ஓர் ஆஸ்பத்திரியின் மீது குண்டு வீசியதால் அங்கிருந்த சகல நோயாளிகளும் கொல்லப்பட்டனரென்றும் இந்திய நகரான அகர்த்தலாவுக்குக் கிடைத்த இரகசியவானெலி செய்தியொன்று கூறியது.

சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு முன்நிற்கமுடியாமல் எதிர்ப்படைகள் பின்வாங்கிக்கொண்டிருக்கின்றனவென்றும் அந்த இரகசிய வானெலி அறிவித்தது இரண்டு ஆஸ்பத்திரிகள்மீது குண்டுவீசப்பட்டதாகக்கூறிய அந்தச்செய்தி ஷேக் முஜிபுர் ரஹ்மான் சுகமாக இருக்கிருர் என்றும் விடுதலை வீரர்களை வழிநடத்துகிருர் என்றும் தெரிவித்தது.

பாகிஸ்தான் ராணுவத்திலுள்ள பலுச்கிஸ்தான் சிப்பாய்களும், பட்டாணியர்களும் உள்நாட்டுக் கலகம் ஆரம்பித்தவுடனேயே ராணுவத்தைவிட்டு தங்கள் தங்கள் பிரதேசங்களுக்கு ஓடிவிட்டார்கள் என்றும் அங்கிருந்து மத்திய அரசுபடைகளை எதிர்த்துப் போராட அவர்கள் திட்டமிடுகிருர்கள் என்றும் 'பாங்களா தேஷ்' வானெலி என்று தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட அந்த வானெலி செய்திகூறியது

குழப்பம் நடைபெற்ற மாகாணங்களிலிருந்து இந்தியாவுக்குள் வந்தபிரயாணிகள் வெளியிட்ட செய்திகளின்படிசுமார் 300 பஞ்சாப் சிப்பாய்கள் விடுதலைப்படைகளிடம் சரணடைந்திருக்கிருர்கள்.

## சோவியத் — யு. எஸ். சீன ஆயுதங்கள்

விடுதலைப்படைகள் மீது பாகிஸ்தான் ராணுவம் சோவியத் டைகர் டாங்கிகளையும், அமெரிக்க ஜெட் விமானங்களையும் சிறு சீன ஆயுதங்களையும் உபயோகப்படுதுவதாக கல்கத்தாவுக்கு கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

சீனச்சார்பு அவாமி லீக் தலைவர் மவுலானு பாஸினி தம 50,000 பேர் கொண்ட விவசாயிகள் படையை விடுதலைப்படையுடன் சேர்ந்து போராட அனுமதித்திருப்பதாகவும் கூறப்படுகின்றது.

### பிரிட்டனில் ஆர்ப்பாட்டம்

பிரிட்டனில் பர்மிங்ஹாம் நகரில் சுமார் 7 ஆயிரம் பாகிஸ்தானியர்கள் கிழக்குப்பாகிஸ்தானில் நடைபெறும் சம்ப[illegible] ஆட்சேபம் [illegible] வகையில் ஆர்ப்பாட்டங்கள் செய்தார்கள்.

டாக்கா ஆஸ்பத்திரியில் குண்டு போடப்பட்டதாகக் கூறும் அட்டைகளை தாங்கியபடி ஆர்ப்பாட்டக்காரர்கள் சென்ருர்கள். இவர்கள் மத்தியில் பேசியவர்கள் சுமார் 10 லட்சம் பவுண் சேர்க்கவேண்டும் என்றும் ஒரு லட்சம் பவுணுக்கு கிழக்குப் பாகிஸ்தானுக்காக துப்பாக்கிகள் வாங்கவேண்டும் என்றும் தெரிவித்தார்கள்.

### விஞ்ஞானிகள் கவலை

கிழக்குப் பாகிஸ்தான் மக்களின் விடுதலை இயக்கத்தை நசுக்கும் வகையில் பாகிஸ்தான் ராணுவ ஆட்சியாளர் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆச்சாரிய விஞ்ஞானிகள் [illegible] ஆழ்ந்த கவலை தெரிவித்திருக்கிருர்.

இந்தப் பிரச்னையில் [illegible] தூண்டும் [illegible] வில் இதை இந்திய ஊளப்ப[illegible] வேண்டும் என்று ஜனசங்கத் தலைவர் திரு. அடல்பிஹாரி வாச்பாய் கருத்து வெளியிட்டிருக்கிருர்.

கிழக்குப்பாகிஸ்தானின் அப்பாவி பொதுமக்கள் ராணுவத்தினரால் கொலை செய்யப்படுகிருர்கள் என்று மேற்குவங்காள முன்னைள் முதலமைச்சர் திரு அஜோய் முகர்ஜி கண்டனம் தெரிவித்துள்ளார்.

## ஒரு முட்டையின் விலை ஆயிரம் பவுண்!

லண்டன், மார்ச் 29

பூமியில் மிக அரிதாகி வரும் மிருகங்களையும், பறவையினங்களையும், விலங்குகளையும், மீன் வகைபோன்ற உயிரினவகைகளையும் பேணி வளர்த்து, எதிர்கால சந்ததியினருக்கென பாதுகாத்து வைக்க வேண்டியதன் அவசியத்தை, தன் மூதாதையர்களைவிட இன்றைய மனிதன் பெரிதும் உணர்ந்துள்ளான.

எமது மூதாதையர், தம் உணவிற்கென, பல அரிய உயிரினங்களை அழித்துவிட்டவர். பல்லாயிரம் வருடங்களுக்கு முன் வாழ்ந்த ராட்சதப் பறவையினங்களையும், மிருகங்களையும், விநோத விலங்குகளையும் இன்று நாம் புத்தகங்களில் சித்திரங்களாகக் காண்கிருேமே யொழிய நேரில் கண்டுகளிக்க முடியாத நிலையில் உள்ளோம்.

அதே காரணத்திற்காகத்தான், உயிரினப் பேணுகையாளர் இம் மறைந்துபோன உயிரினங்கள் சம்பந்தப்பட்ட எவ்வகையான சின்னங்களுக்கும் மிகப்பெரிய தொகையை கொடுக்கத் தயாராகவிருக்கின்றனர். 'கிரேட் ஆக்' எனப்படும் ராட்சத கடற் பறவை 1844ம் ஆண்டே மறைந்துவிட்ட ஒரு அரிய இனத்தைச் சேர்ந்தது. பஞ்சு வைத்தடைக்கப்பட்ட இப் பறவையின் உடலொன்று சென்றவாரம், 9,000 பவுண்களுக்கு லண்டனில் விற்பனையாகியது. ஐஸ்லந்து நாட்டைச் சேர்ந்த ஒரு இயற்கைச் சரித்திர நூதனசாலை இப் பெரிய தொகையை கொடுத்து ஏலவிற்பனையில் இந்த அபூர்வ பறவையின் உடலை வாங்கியது.

அதே ஏலவிற்பனையில் உலகிலேயே மிகப்பெரிய தெனக்கருதப்படும் முட்டையொன்று 1,000 பவுண்களுக்கு விற்பனையாகிறது. இம் முட்டை எமது சாதாரண கோழிகளின் 148 முட்டைகளுக்குச் சமமானதாம். பல நூற்றுண்டுகளுக்கு முன் மடகஸ்கார் தீவில் ஜீவித்த தீக்கோழி போன்ற பறவையினத்தின் முட்டை இதுவாகும்.

தற்போது அருகிவரும் உயிரினங்களை, முற்ருக அழியவிடாமல் பேணிப் பாதுகாக்கும் பணியில் இன்றைய உயிரினப் பாதுகாவலர்கள் முனைந்து நிற்கின்றனர். அழிந்துபோகவிருக்கும் உயிரினங்கள் சிலவற்றைக் கொண்டுவந்து, அவற்றை இனவிருத்தி செய்யும் முயற்சியில் அவர்கள் இன்று ஈடுபட்டிருக்கின்றனர்

பிரபல பிரிட்டிஷ் உயிரின ஆராய்ச்சியாளரான திரு. பிலிப் வெயர் அரிய நீர்நாய்களையும், பெசன்ட் கோழி இனங்களையும் பாதுகாத்து, இன விருத்தி செய்வது பற்றி பாகிஸ்தான் அரசாங்கத்திற்கு ஆலோசனைகூற இப்பொழுது அந்நாட்டிற்கு விஜயம் செய்திருக்கிருர். இவர் மூன்று வாரங்கள். பாகிஸ்தான் காஷ்மீர் எல்லையிலுள்ள இமாலய மலையடிவாரத்தில் இருக்கும் குகைகளுக்குள் வாழ்ந்து வரும் 'ராகோ' எனப்படும் அரிய வர்ணக் கோழி இனங்களை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபடுவார் திரு வேயரின் இப்பெரும்முயற்சிக்கு உலக வன உயிரின தாபனம், நிதியுதவி அளித்து வருகிறது.

## 'இருபாலாரும் திறமை பெறவேண்டும்'

யாழ்ப்பாணம். செவ்

'உடற்பயிற்சி அணிநடையில் ஆண்பிள்ளைகள் போன்று பெண் பிள்ளைகளும் திறமைபெற்றிருக்க வேண்டும். அதற்கேற்றவாறு பெண்பிள்ளைகளையும் பயிற்ற வேண்டும்'

இவ்வாறு வடமாநில கல்வி அதிபதி திரு. மாத்தில நேற்று, யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வடபகுதி பாடசாலைகளுக்கான உடற்பயிற்சி அணி நடை காட்சியை பார்வையிட்டபோது தெரிவித்தார் வடமாகாண மாணவர்களின் உடற்பயிற்சி அணி சிறந்ததமைந்திருந்ததாக அவர் பாராட்டினர்!

உடல்பயிற்சி வித்தியாதிசி திரு சிவரத்தினம் இவ் விழாவுக்குத் தலைமைதாங்கினர். உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷனுக்கும், இராமநாதன் கல்லூரிக்கும் 'கப்சர்' வழங்கப்பட்டது.

(குவிம)

## 32 யாத்திரீகர் திரும்பவில்லை

யாழ்ப்பாணம், செவ்

அண்மையில் நடைபெற்ற கச்சதீவு அந்தோனியார் கோவில் உற்சவத்துக்குச் சென்ற 32 யாத்திரிகர்கள் இன்றுவரை திரும்பவில்லை என பொலிஸ் தலைமைப் பீடத்துக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மன்னர், நாறம்பிட்டியா, வத்தளை கொழும்பு ஆகிய இடத்தைச்சேர்ந்த குறிப்பிட்ட 32 யாத்திரிகர்களும் பேசாலைத் துறைமுகத்திலிருந்து கச்சதீவுக்குச் சென்றவர்களாவர், இவர்களுள் 13 பேர் முஸ்லிம்கள் 17 பேர் தமிழர் என்றும் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நன்மை தீமையைப் பகுத்தறியும் அறிவை மயக்கி அதுபயக்கும் ஒழுக்கத்தைக் கெடுத்தலால் கள்ளுண்ணுதல் பாவத்துக்கெல்லாம் தலையாயது.

— நாவலர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams; "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம்
16ந் திகதி (30-3-71)


## கடற்றொழில் பல்கலைக்கழகம்

கடற்றொழில் பல்கலைக்கழகம் ஒன்று அமைக்கப் படவிருப்பதாகவும் கடற்றொழிலில் நவீன முறைகளை கடற்றொழிலாளர்கள் கற்பதற்கு இப் பல்கலைக் கழகம் வழிசெய்யுமென்றும் ஒரு செய்தி கூறுகிறது. கடற்றொழிலில் நவீன முறைகளைக் கையாள்வதற்கும் கடற்றொழிலை விருத்தி செய்வதற்கும் எப்போதோ நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். கடற்றொழில் பல்கலைக்கழகம் அமைப்பதென்ற திட்டம் கடதாசித் திட்டமாக இருந்துவிடாமல் விரைவில் செயல்பட வேண்டும். வேலையற்றோர் எண்ணிக்கையைப் பெருக்கும் பல்கலைக்கழகங்களை அமைப்பதைவிட விவசாய கடற்றொழில் பல்கலைக்கழகங்களையும் தொழில்நுட்ப நிபுணர்களை உருவாக்கக்கூடிய பல தொழில்பல்கலைக்கழகங்களையும் அமைப்பது நாட்டின் முன்னேற்றத்துக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

கடல்சூழ்ந்த நாடு நம் நாடு. ஆனாலும் நமைச் சுற்றியுள்ள கடல்படுகையின் வளத்தை நாம் இதுவரை சரியாகப் பயன்படுத்தவில்லை. நமது கடலின் உள்ள திரவியங்களை வெளிநாடுகள் சில பயன்படுத்தி நன்மை பெற்றிருக்கின்றன.

கடலில் மீன் மட்டுமல்ல மற்றும்பல சத்துள்ள உணவுப் பொருள்கள் இருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்திருக்கின்றனர். தரையிலிருந்து பெறக்கூடிய உணவுப் பொருள்களைவிட கடலிலிருந்து அதிக அளவில் உணவுப் பொருள்களைப் பெற முடியுமென்றும் அவர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

உழைப்புச் சக்தி நிறைந்த கடற்றொழிலாளருக்கு நம் நாட்டில் குறைவில்லை. ஆனால் அவர்களுக்கு நவீன சாதனங்களும் நவீன முறையில் மீன்பிடிப்பதற்கான பயிற்சியும்போதியளவு அளிக்கப்படவில்லை. நவீன சாதனங்களும் நல்ல பயிற்சியும் அளிக்கப்பட்டால் நமது தேவையை யும் பூர்த்தி செய்து வெளிநாடுகளுக்கும் மீன் ஏற்றுமதி செய்து வருமானத்தைப் பெருக்க வாய்ப்புக் கிடைக்கும்.

டின்களில் மீன் அடைக்கும் தொழிற்சாலைகள் மற்றும் சில இடங்களில் அமைப்பதன் மூலம் பலருக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும்.

கடற்றொழில் விருத்தியில் அக்கறை செலுத்துவதால் பலவழிகளிலும் நாட்டுக்கு நன்மைதான் கிடைக்கும். எந்தத் திட்டத்தையும் விரைவில் செயல்படுத்துவதில் தான் அவற்றின் வெற்றியும் பயனும் தங்கியிருக்கிறது.

# சிறைக்கு அஞ்சாத ஷேக்!

## கிழக்குப் பாகிஸ்தானின் தன்னிகரில்லாத தலைவர்

1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் தேர்தல் பிரசார ஊர்வலம் ஒன்று டாக்கா வீதிகள் வழியாகப் போய்க் கொண்டிருந்தது.

அவாமிலீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் வாகனம் ஒன்றில் பவனியாக அழைத்துச் செல்லப்பட்டுக்கொண்டிருந்தார்.

மக்கள் கூட்டத்திலிருந்து ஓர் இளைஞன் திடீரெனப் பாய்ந்து வந்தான். ஷேக் வந்த வாகனத்துக்குள் பாய்ந்தான். கரங்களை வேகமாக வீசியபடி ஷேக்கைத் தழுவிக்கொண்டான், முதலில் இடதுமார்பில் சாய்ந்தான் பின்னர் வலது மார்பில் சாய்ந்தான். திரும்பவும் இடது மார்பில் அடுத்து வலதுமார்பில் இவ்வாறாக மாறிமாறி அவரைத் தழுவிக்கொண்டான்.

இந்தத் தழுவல்களின் போது அந்த இளைஞன் தன்னிகரில்லா அந்தத் தலைவனை அடிக்கடி முத்தமிட்டுக்கொண்டான். சனக் கூட்டம் ஆர்ப்பரித்து அந்த வாலிபனின் உணர்ச்சியை ஆமோதித்தது,

ஷேக் உணர்ச்சிவசப்படுப் போனார் இளைஞனை அன்போடு அப்புறப்படுத்த முயன்றார், பின்னர் அவர் தள்ளிவிடும் வரை அவன் விலகவே இல்லை.

ஆம் ஏழரைக்கோடி மக்களின் தன்னிகரில்லாத 51 வயது தலைவரான் முஜிபுர் ரஹ்மானின் அரசியல வாழ்வில் மேலே சென்னது போன்ற சம்பவங்கள் பழக்கப்பட்டுப் போனவை,

கடந்த 30 ஆண்டுகளாக வட்டமான முகமும் கறுத்த தலைமயிரும், மீசையும் முகத்தைவிட்டு அகலாதமூக்குக் கண்ணாடியும் கொண்ட அவரது உருவம் ஆயிரக்கணக்கான எதிர்ப்பு சுலோக அட்டைகளில் பொறிக்கப்பட்டு வந்துள்ளது.

கடந்த காலங்களில் முஜிபுர் ரஹ்மான் அரசியல் காரணங்களுக்காக மொத்தமாக ஒன்பது ஆண்டுகளும் எட்டு மாதங்களும் சிறையில்இருந்திருக்கிறார் வேறு எந்தவொரு பாகிஸ்தான் தலைவரும் இவ்வளவு நீண்டகாலம் சிறையில் இருந்ததில்லையென்று அவரது வாழ்க்கை குறிப்புகளை எழுதிய ஒருவர் கூறுகிறார்.

இப்பொழுது கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள பரீதபூர் மாவட்டத்தில் கோப்பால் கஞ்ச் துணைப்பிரிவிலுள்ள துங்கிபரா கிராமத்தில் 1920ம்ஆண்டு மத்தியதரக் குடும்பம் ஒன்றில் ஷேக்முஜிபுர் ரஹ்மான் பிறந்தார்.

முதலில் கோப்பால் கஞ்ச் மிஷன் பாடசாலையில் பயின்ற அவர் கல்கத்தா இஸ்லாமிய கல்லூரியில் பட்டம் பெற்றார், அகில இந்திய முஸ்லீம் மாணவர் லீகின் பிரதிநிதியாக தெரிவுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து 1943-ம் ஆண்டுவாக்கில் அவர் அரசியலில் புகுந்தார். முஸ்லிம் லீகின் கோப்பால் கஞ்ச் பிரிவின் செயலாளராகவும் இருந்தார். பிரிவினைக்குப்பின்னர் முஸ்லிம் லீகிலிருந்து பிரிந்து ஜன நாயக இளைஞர் லீக்கை ஸ்தாபித்தார். கிழக்குப் பாகிஸ்தான் முஸ்லிம் மாணவர் லீக்கையும் உருவாக்கினார். இந்த லீக் இயக்கத்தின் பொழுது கிழக்குப் பாகிஸ்தானில் அவர் நான்கு தடவைகள் ஜெயில் அனுபவித்தார், ஜெயிலில் இருக்கும்போதே கிழக்குப்பாகிஸ்தான் அவாமிலீக்கின் கூட்டுக்காரியதரிசியாக தெரிவு செய்யப்பட்டார். பிரிவினைக்குப் பிறகு ஒருமுறை நட்புமுறையில் இந்தியாவுக்கு வந்து அப்பொழுது ஜனதிபதியாக விருந்த ராஜேந்திரப் பிரசாத்தையும் சந்தித்திருக்கிறார்.

1954ல் கிழக்கு வங்காள சட்டசபைக்குத் தெரிவு செய்யப்பட்டார். அதே ஆண்டில் திரு பாஸ்லுல் ஹக்கின் மந்திரி சபையில் சேர்ந்தார், அந்த மந்திரி சபை கலைக்கப்பட்டவுடன் இவர் கைது செய்யப்பட்டார். 1955ம் ஆண்டில் அரசியல் நிர்ணய சபைக்கு தெரிவுசெய்யப்பட்டார்.

1958ல் அயூப்கான் ஆட்சியைக் கைப்பற்றபோதுஷேக் கைது செய்யப்பட்டு 18 மாதங்கள் ஜெயிலில் வைக்கப்பட்டிருந்தார். 1960ல் விடுதலையான அவர் மீண்டும் 1962ல் கைதுசெய்யப்பட்டு திரு எச் எஸ் சுக்கிரவர்த்தியுடன் ஜெயிலில் வைக்கப்பட்டார்.

1966ல் மூன்றுமுறைஜெயிலுக்குப் போனார். 1968ல் யூனிம்கான் கிழக்குப்பாகிஸ்தான் கவர்னரானபொழுது முஜிபுர் ரஹ்மான்தாம் கவர்னராய் இருக்கும்வரைஜெயிலில் இருந்தாக வேண்டும் என்றுகூறினர். பின்னர் அகர்த்தாலா சதிவழக்கில் ஷேக் சம்பந்தப்படுத்தப்பட்டார். 1969பெப்ரவரியில் விடுதலை செய்யப்பட்டார்.

1970-ம் ஆண்டு நடந்த பொதுத்தேர்தலில் ஷேக்கின் அவாமிலீக் மாகாண சட்டசபையில் அறுதிப் பெரும்பான்மை பெற்றது தேசிய அஸம்பிளியிலும் பெரும்பான்மைப் பலம் பெற்றது.

கிழக்குப்பாகிஸ்தானுக்கு முழு சுயாட்சிதேவை என்ற ஆறு அம்சத்திட்டத்தை இக் கட்சிதேர்தலின் போது முன்வைத்துப்போராடியது.

டாக்காவில் பெரிய வீடொன்றில் அவர்குடும்பம் வாழ்கிறது. மனைவியும் மூன்று புதல்வர்களும் இரு புதல்விகளும் அவருக்குண்டு அரசியல் வேலைகள் இல்லாத சமயங்களில் அவர் இன்சூரன்ஸ் விற்பனையாளராக வேலைசெய்து சம்பாத்தியம் தேடுகிறார்.

# "கந்தபுராணம் போதிக்கும் உண்மை"

மானிப்பாய், திங்கள் 'இறைவனிடம் வரங்களைப் பெற்று அதன் பலத்தால் நன்மையையும் செய்யலாம் தீமையையும் செய்யலாம் என்ற உண்மையினைக் கந்தபுராணம் எமக்கு விளக்குகின்றது'

கடந்த 5 மாதங்களாகத் தொடர்ந்து ஆனைக்கோட்டை மூத்தவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராணப் படனம் செய்து உரை கூறி வந்த சித்தாந்தச் செல்வன் நல்லையாவுக்கு நேற்று முன்தினம் நிகழ்ந்த அப்புராண பூர்த்தி உரையின்போது பொற்கிழி வழங்கி பொன்னாடையும் போர்க்கப்பட்டது. அவ் வைபத்தில் உரையாற்றிய இளைப்பாறிய ஆசிரியர் திரு. ஞானசம்பந்தன் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் முருகனின் அருட்துளிகளில் சில எம் மீது பட்டபடியால் நாம் நல்லையாவின் கந்தபுராண விளக்கவுரையினைப் பூரணமாகக் கேட்கும் பாக்கியம் கிடைத்தது என்றார்.

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தர் திரு. துரையப்பா பேசுகையில், கந்தபுராணத்தில் எக்காலத்திற்கும் பயன்படக்கூடிய உயர்ந்த தத்துவங்கள் இருக்கின்றன, அத்தத்துவங்களை அறிந்தவர்களே உண்மையான சைவர்கள் என்றார். சைவ உலகில் அருந்தொண்டு புரிந்து வரும் திரு. நல்லையா புராணங்களுக்கு உரை கூறுவதில் தலைசிறந்து விளங்குகின்றார் என்று மேலும் பேசுகையில் அவரைப் பாராட்டினார். இவ்வைபவத்தையொட்டி மேற்படி ஆலயத்தில் விசேட பூசைகளும் நடைபெற்றன.

## மேலும் 100 பாடசாலைகள்

கோட்டை, திங்கள் கல்வியமைச்சு இவ்வருட முடிவிற்குள் 100 புதிய பாடசாலைகளை நிறுவவிருக்கிறது. இப் பாடசாலைகளுக்கான நிதி ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த கல்வி நிறுவனங்கள் யாவும் அநேகமாக கனிஷ்ட வித்தியாலயங்கள் யாவும் அநேகமாக கனிஷ்ட வித்தியாலயங்களாகவே அமையும் போக்குவரத்து வசதி குறைவான பாடசாலைகளுக்கு செல்வதற்கு மாணவர்கள் கஷ்டப்படுகின்ற இடங்களிலேயே வித்தியாலயங்கள் நிறுவப்படும் எனக் கல்வியமைச்சைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு திங்கள் வவுனியா மாவட்ட நீதி மன்றத்தில் தொலுக்கு முதலியாராகக் கடமையாற்றிய திரு வெற்றிவேலு சேவையினின்றும் ஒய்வு பெற்றதைத் தொடர்ந்து அவரது இடத்திற்கு மன்னார் பிஸ்கால் மார்ஷலாகக் கடமையாற்றிய திரு. எம். எஸ். கந்தசாமி நியமனம் பெற்றுள்ளார்.

## இன்று

யாழ்ப்பாணம், செவ். இன்று மாலை நல்லூர்க் கந்தசாமி கோவில் திருப்புகழ் மண்டபத்தில் 'முருகனும் தோட்டியும்' என்னும் பொருள்பற்றி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் காத்திகைப் பிரசங்கம் செய்யவுள்ளார்.

0 0

சுழிபுரம், செவ் பண்ணாகம் விசுவத்தினை முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகிறது. மாலை 7 மணிக்கு பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியம் 'பெண்மை கொள் சைவநீதி' என்னும் பொருள்பற்றி உரை நிகழ்த்தவுள்ளார்.

## நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான...

# "மேயர் தனது வட்டாரத்... 1 லட்சம் ரூபா செலவு...

## 'கொழும்புத்துறை வட்டாரத்திற்கு 87,000 ரூபா செலவு செய்தேன்'

— மேயர்

யாழ்ப்பாணம், செவ். யாழ்ப்பாண மாநகரசபை நிர்வாகத்தில் ஊழல், சீர்கேடு இருந்துவருகிறது. பாகுபாடின்றி கடமையாற்றிய ஊழியர்களில் சிலர் நீக்கப்பட்டார்கள். மாநகரசபை வரி இரட்டிப்பாக உயர்த்தப்பட்டது. மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவில்லை, உறுப்பினர்கள் மேயரினால் பாகுபாடாக நடத்தப்பட்டனர் இப்படியான பல காரணங்களினால்தான் இம் முடிவுக்கு வந்தோம்.

யாழ்ப்பாணம் மேயர் திரு ரி எஸ் துரைராஜா மீது நம்பிக்கையில்லாப்பிரேரணையைக் கொண்டுவந்து பேசிய திரு தம்பு கந்தையா மேற்கண்டவாறு கூறினார்.

மாநகரசபை ஆணையாளர் திரு. ஏ ரி. சுந்தரம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் 21 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டம் சரியாக 3 மணிக்கு ஆரம்பமானது பிற்பகல் 2-30மணிக்கே துரைப்பா மேயர்குழுவைச்சேர்ந்த 7பேர் வந்திருந்தனர். நம்பிக்கையில்லா பிரேரணையில்கையெழுத்திட்டவர்களில் 10 பேர் வந்துசேர்ந்தனர் திரு துரையப்பா மேல் மாடியில்நின்று பார்த்துக் கொண்டிருந்தார் திரு விஸ்வநாதன், திரு மார்க்கண்டு ஆகியோரின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். 2-50 மணிக்கு உதவி மேயர் திரு ஏ துரைராஜசிங்கம் டாக்ஸியில் வந்திறங்கினார் 2-55 மணிக்கு திரு ஏ விஸ்வநாதன் வந்துசேர்ந்தார். திரு. மார்க்கண்டை காணாதது சிலருக்கு திகைப்பையளித்தது. உடனடியாக இரு கார்கள் திரு மார்க்கண்டுவை தேடிப் புறப்பட்டன திரு மார்க்கண்டு கடத்தப்பட்டுவிட்டதாகவும் பேச்சுகள் அடிபட்டன.

கூட்டம்ஆரம்பமாகி அரைமணித்தியாலத்தின் பின்தான் திரு மார்க்கண்டுவந்து சேர்ந்தார், அதன்பின்தான் திரு துரையப்பா கலகலப்பாக காணப்பட்டார். மூன்றுவது வரிசையில் கடைசி ஆசனத்தில் திரு ரி எஸ் துரைராசா அமர்ந்திருந்தார் அதே வரிசையில் நாலா... திரு துரையப்பா அமர்ந்திருந்தார்.

கலரியில் பொதுமக்கள் நிரம்பியிருந்தனர்சபைபாதுகாவலர்கள் அங்கும் இங்குமாக உலாவிக்கொண்டிருந்தனர். இன்ஸ்பெக்டர் தலைமையில் வந்த பொலிஸ் கோஷ்டி கீழே தங்கியிருந்தது.

திரு தம்பு கந்தையா கூறியதாவது: 1970-ம் பெப்ரவரி 13-ம்திகதிமேயராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார் ஒருபோட்டியும் இருக்கவில்லை சில மாத... அவர் நேர்மையாக நட...தார். அதன்பின் பாகுபா...காட்ட ஆரம்பித்தார்.

மருத்துவமனைகளுக்கு கொடுக்கப்பட்டுவந்த பா... சிலமாதங்களாக நிறுத்த...பட்டது இதனால் ஏழை...தாய்மார்கள் கஷ்டப்பட்டனர். மேயர் பச்சிளங் குழந்தைகளின் வயிற்றில் அடித்துவிட்டார் இதுபற்றி ச...யில் ஆலோசிக்கவில்லை. ...ற்கு வரவு செலவு திட்ட...தில் நிதி ஒதுக்கப்பட்ட...

# பருத்தித்துறை...

# 'தியாகி... கோர்ட்...

பருத்தித்துறைத் தேர்தல் ஆட்சேபனை வழக்கில் திரு. துரைரத்தினத்தை மனுதாரரின் வழக்கறிஞரான திரு. கே. சி. நடராஜா குறுக்கு விசாரணை செய்ததின் தொடர்ச்சி வருமாறு:

இந்த வழக்கு கொழும்பில் நீதியரசர் எஸ். ஆர் விஜயதிலக்க முன்னிலையில் விசாரிக்கப்படுகின்றது.

கே: திரு. நடராஜா பதவியிலிருந்து இறக்கப்படுவதற்கு நீர் காரணமாக இருந்தீர் என்ற பிரச்சாரத்தை முறியடிக்க, நீர் திரு. நடராஜாவை மாசுபடுத்திப் பிரச்சாரத்திலீடுபட்டீரல்லவா?

ப: இல்லவே இல்லை.

கே: திரு. நடராஜாஒழுங்கினமாக நடந்துகொண்டதாக கிருஷ்ணராஜா பேசவில்லையா?

ப: நகரசபை விஷயம் பற்றி, எல்லாத் தகவல்களையும் விளக்கிக்கூறினார் அவர்.

கே: தனிப்பட்ட முறையில் நேர்மையின்றி நடந்துகொண்டதாகக் குற்றம் சாட்டப்படவில்லையா?

ப: அவரது தனிப்பட்ட வாழ்க்கையைப்பற்றி எச்சந்தர்ப்பத்திலும் யாரும் தாக்கிப்பேசவில்லை.

கே: நகரசபை ஊழல் பற்றிப் பேசியது. திரு. நடராஜா ஆட்சியிலிருந்த உறுப்பினராகக்கூடிய...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ...த்துறை தேர்தல் ஆட்சேப வழக்கு

# ...யாகி' 'உயிர்த்தியாகி' பற்றி ...கோட்டில் விளக்கம்

...த் தேர்தல் ...க்கில் திரு. ...மனுதா...ன திரு. ...குறுக்கு ...ப்பதின் ...மாறு: ...கொழும்பில் ...ஆர் விஜய ...யில் விசா... ...ஜாபதவியி...படுவதற்கு ...இருந்திர் ...த்தை முறி... திரு. ந... ...சுபடுத்திப் ...பட்டரல் ...க்கை. ...ராஜா ஒழுங் ...கொண்ட ...ஜா பேச ... விஷயம் ...தலைவ... ...ஞர் அவ... ...ட முறை ...றி நடந்து ...குற்றம் ...லையா? ...தனிப்பட்ட ...ற்றி எச்சந் ...ாரும் தாக் ... ஊழல் ... திரு, ...ஆட்சிமன்ற ...க்கூடிய

தலைமையுடையவரல்ல என்று காட்டத்தானே?

ப: எனக்கு எதிரான பிரச்சாரத்தைச் சந்திக்க நான் நகரசபை தலைமைப் பதவியில் மாற்றம் ஏற்பட்டதற்கான அடிப்படையை விளக்கவேண்டியதேற்பட்டது.

சே: அவர் கௌரவக் குறைவாவர்; நகரசபை நிர்வாகத்தைக் குழப்பிவிட்டவர் என்று காட்டுவது தானே உமது நோக்கம்?

ப: அதை என் நோக்கமாகச் சொல்வதற்கில்லை.

கே: எந்தச் சந்தர்ப்பத்திலாவது அப்போது உள்ளூராட்சி அமைச்சராக இருந்த திருச்செல்வத்திடம் பருத்தித்துறை நகரசபை நிர்வாகக்குறைபாடு பற்றி முறையீடு செய்திருக்கிறீரா?

ப. நான் ஒரு தர்மசங்கடமான நிலையிலிருந்தேன். அமைச்சர் திருச்செல்வமோ எங்கள் கட்சியின் உறுப்பினர், மறுபுறம் திரு. நடராஜா எனது சமூகத்தைச் சேர்ந்தவராக இருந்தமையால் நான் நடவடிக்கை ஏதும் எடுக்காமலிருப்பதாகக் குற்றச்சாட்டு வந்தது.

கே: பொதுவாழ்வின் தூய்மையில் அக்கறை கொண்டவர் என்ற முறையிலும் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் என்றவகையில் நகரசபையில் நிர்வாகச்சீர்கேடு பற்றி அமைச்சரிடம் முறையிடவேண்டியது உமது கடமை என்று நீர் கருதவில்லையா?

ப: அப்படிச்செய்வது அரசியல் சாதுர்யமான செயலாக நான் கருதவில்லை.

கே: ஒகோ ஆட்சிமன்ற உறுப்பினரின் கடமைக்கும், அரசியல் சாதுர்யமான செயலுக்கும் வேறுபாடு காட்டுகிறீரா?

ப: ஆமாம் அப்படித்தான் நாங்கள் அரசியல்வாதிகள் தேர்தலிலும் மக்களுடைய வாக்குகளிலும் தங்கியிருப்பவர்கள் எனவேதான் அரசியல் சாதுர்யமற்ற செயல்களில் ஈடுபடவிரும்பவில்லை. நான் சாதாரண நிர்வாக அதிகாரியாக இருந்திருந்தால் நிச்சயமாகக் கடுமையான நடவடிக்கை எடுத்திருப்பபன்.

கே: அர்ச்சுனராசாவின் கொலை அரசியல் கொலை என நீர் கருதுகிறீரா?

ப: இல்லை.

கே: உம்மைப் பொறுத்தமட்டில் அர்ச்சுனராசாவின் கொலை அரசியல் காரணமான கொலையல்ல என்பதைப்பற்றி மனதில் தெளிவாக இருந்ததா?

ப: ஆம்.

இச்சந்தர்ப்பத்தில் திரு. துரைரத்தினத்தை ஆங்கிலத்தில் குறுக்கு விசாரணை செய்துகொண்டிருந்த வழக்கறிஞர் திரு கே. சி. நடராஜா 'மார்ட்டர்' (MARTYR) என்ற ஆங்கில வார்த்தைக்குத் தமிழ் வார்த்தை என்ன என்று கேட்க, திரு; துரைரத்தினம்' உயிர்த்தியாகி' என்று பதிலளித்தார். 'தியாகி' என்ற வார்த்தைக்கு ஆங்கில வார்த்தை 'மார்ட்டர்' என்பது வழக்கறிஞரின் வாதம். 'தியாகி என்ற வார்த்தைக்கு அர்த்தம் என்ன என்பதுபற்றி தான் மெட்ராஸ் லெக்சிச்சனைப் பார்த்ததாகவும் அதில் 'தியாகம் செய்பவன் தியாகி' என்று இருப்பதாகவும். 'உயிர்த்தியாகம்' செய்பவன்தான் 'மார்ட்டர்' என்ற வார்த்தைக்கு இலக்கணமாக அமைபவன் என்றும் திரு. துரைரத்தினம் கூறினார். 'உயிர்த்தியாகம்' செய்தால் 'உயிர்த்தியாகி' என்றுதான் அழைக்கவேண்டும் என்றும் திரு. துரைரத்தினம் கூறினார்.

பெப்ரவரி மாதம் 4-ம் திகதியும் மே மாதம் 22 ம் திகதியும் 'தியாகி அர்ச்சுனராசா அரங்கு' என்ற பெயரில் மேடையமைத்து திரு. துரைரத்தினத்துக்கு ஆதரவாகத் தேர்தல் கூட்டங்கள் ஏற்பாடு செய்திருந்ததைச் சுட்டிக்காட்டிய அர்ச்சுனராசாவுக்கு தியாகி' என்ற அடைமொழி அளிக்கப்பட்டதற்குக் காரணம் என்ன என வழக்கறிஞர் திரு. கே. சி. நடராஜா கேட்டார்.

'தியாகி அர்ச்சுனராசா அரங்கு' என்று தானே தன்னைக் கேட்டோ பெயர் வைக்கவில்லை என்றும் கூட்டத்தை முன்னின்று ஏற்பாடு செய்தவர்களும்; வாலிப முன்னணியினரும் தாங்களாகவே விரும்பி தங்கள் நண்பன் தங்களுடன் கூடவே மேடைகள் அமைப்பதிலும் மேடை அலங்காரம் செய்வதிலும் மும்முரமாக உழைத்தவன் அர்ச்சுனராசா ஆகையால் அவரது நினைவாகச் சூட்டியிருக்கலாம் என்றார் துரைரத்தினம்.

'தியாகி' என்ற அடைமொழியைப் பெற அர்ச்சுனராசா என்ன 'தியாகம்' செய்திருக்கிறார் என்ற கேள்விக்கு, 'அவருக்கு இயன்ற சிறுவழியில், முழு சரீர உழைப்பை அளிப்பதன் மூலம் அவரும் தியாகம் செய்திருக்கிறார் என்று கூறலாமென்று பதிலளித்தார் துரைரத்தினம்

தொடர்ந்து செல்வி மனோரமா 9ம் திகதி வல்வெட்டித்துறைக் கூட்டத்தில் பேசியதுபற்றி திரு துரைரத்தினத்திடம் குறுக்குக்கேள்விகள் கேட்கப்பட்டன. திரு துரைரத்தினம் அவற்றிற்குப் பதிலளித்துக் கூறியதாவது:-

செல்வி மனோரமா வல்வெட்டித்துறைக் கூட்டதில் மட்டுமே பேசினார் அவர் பேசவிருப்பதாக நோட்டீசில் அச்சிடவில்லை. அவர் மேடையிலேறி 'கொலையுண்ட அர்ச்சுனராசாவின் மகள்'. என்று தன்னை அறிமுகம் செய்து கொண்டார் செல்வி மனோரமா 5மைல்கள் தூரத்திலுள்ள பருத்தித்துறையில் வசிப்பவர். அவர் மேடையில் ஏறிப்பேச வந்தபோது தான் அவரைப் பேசப் போட்டிருப்பது எனக்குத் தெரியும். அவர்பேசவந்தது குறித்து நான ஆச்சரியப்பட்டேன் யார் அவரைக்கூட்டி வந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. அவருடைய மாமாவுடனோ, உறவினருடனோ வந்திருப்பார்.

கே: உம்முடைய பிரச்சாரத்திற்கு செல்வி மனோரமாவின் பேச்சு அத்தியாவசியமானதா?

[illegible]

கே: தற் [illegible]

நீர்மேற்கொண்டிருந்த நேரடித் தாக்குதலில் இது ஒரு அங்கமாக இருக்கவில்லை?

ப: இல்லை.

கே: உமது முழுப்பிரச்சாரத்திலும் பங்கு பற்றிய ஒரே ஒரு பெண்பிள்ளை செல்வி மனோரமா தான்?

ப: ஆம்.

கே: அவர் பார்த்து வாசித்த கடுதாசித்துண்டை அவருக்குக் கொடுத்தது யார்?

ப: எனக்குத் தெரியாது

கே: அந்தத்துண்டை யார் கொடுத்தார்கள் என்று இன்றுவரையில் செல்வி மனோரமாவிடம் நீர் கேட்டதுண்டா?

ப: இல்லை.

கே: அந்தத்துண்டு இல்லாதிருந்திருந்தால்...?

ப: பிரச்னை இலகுவாக இருந்திருக்கும்.

கே: மனோரமாவின்மாது காவலராகியபூபாலரட்ணத்திடமாவது அந்தத்துண்டைப் பற்றியும் அந்தத்துண்டைக் கொடுத்தவர்பற்றியாவது இன்றுவரை கேட்டிருக்கிறீரா?

ப: கேட்டிருக்கலாம்; நினைவில்லை.

கே: 1965க்கும் 1970 க்குமிடையில் உமது ஆதரவாளர்களில் எத்தனையோபேர் மரணமடைந்திருப்பார்கள் அல்லவா?

ப: ஆமாம்.

கே: அவர்களின் சார்பில் எவரேனும் வந்து உமக்கு ஆதரவாகப் பேசினார்களா?

ப: எல்லா ஆதரவாளர்களும் பேச வருவார்களா?

கே: இந்தக் கூட்டத்தில் பேச வந்ததற்குக் காரணம் என்ன என்று மனோரமாவிடம் கேட்டீரா?

ப: கேட்டதாக நினைவில்லை

கே: 'கொலையுண்ட அர்ச்சுனராசாவின் மகள்' என்று ஏன் மனோரமா அவரை அறிமுகம் செய்துசெய்து கொண்டார்;

ப: கொலையுண்டது நிகழ்ந்த உண்மை. அதைச் சொல்வதில் விசேஷம் ஒன்றுமில்லை

கே: நடராஜாவுக்கு எதிராகப் பேசுவதற்கென்றே இந்தப் பெண்பிள்ளையை நீர் அழைத்துவந்தீர் என்று நான் சொல்கிறேன்

ப: மறுக்கிறேன்.

கே: வல்வெட்டித்துறைப் பெண்களுக்கு மத்தியில் சிலரைப் பேசவிட்டு, பெண்களை நடராஜாவுக்கு வோட்டுப் போடாமல் செய்யவேண்டுமென்பதுதான் உமது நோக்கம்?

ப: இல்லை-

கே: சிறு பெண்பிள்ளையை மேடையில் ஏற்றுவதற்குக் காரணமென்ன?

ப: அப்படியானவர்களை மேடையேற்றுவது பாஷனாகிவிட்டது!

கே: தமிழ்க் காங்கிரஸ் கூட்டங்களில் பேசும் மனோரஞ்சிதம் இலங்காதேவியைத் தெரியுமா?

ப: தெரியாது; அவரது பேச்சினை டேப் ரிக்கார்டரில் கேட்டிக்கின்றேன். சிறந்த பேச்சாளர் என்று சொல்லமுடியாது

கே: அவருக்குப்போட்டியாக மனோரமாவைப் போடுவதாக உமது நோக்கமா?

ப: வாலிப முன்னணியினர் அப்படி நினைத்திருக்கலாம்

நீதியரசர்: அர்ச்சுனராசாவின் கொலை வழக்கில் முதலாவது எதிரி விடுதலைசெய்யப்பட்டபோது பொதுவாக அவரது ஆதரவாளர்கள் ஏமாற்றமாக இருந்தார்களா?

சாட்சி: ஏமாற்றமாக இருந்ததாகச் சொல்லமுடியாது

நீதி: உமக்கு எப்படியிருந்தது?

சாட்சி: எனக்கு ஒன்றுமில்லை. குடும்பஸ்தன் இறந்துவிட்டான் என்ற கவலைதான்

வழக்கறிஞர் நடராசா: அர்ச்சுனராசா இறந்தபோது அவரது சடலத்தில் தமிழரசுக் கட்சியின் கொடி போர்த்தப்பட்டிருந்தது

சாட்சி: போர்த்தப்பட்டிருக்கலாம்

கே: அந்த நேரத்திலிருந்து அவரது கொலையை அரசியல் காரணத்துக்காகப் பயன்படுத்த நீர் திட்டமிட்டீர்?

ப: இல்லை: அரசியல் காரணத்துக்கப் பயன்படுத்த இதைவிட எத்தனையோ வேறு பிரச்னைகள் இருந்தனவே!

கே: செல்வி மனோரமாவின் வயது என்ன?

ப: பத்து வயதிருக்கும்.

கே: வல்வெட்டித்துறைக் கூட்டத்தில் பேசும் போது 9 வயதிருக்குமா?

ப: ஆமாம்.

கே: உமக்கும் பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள் அல்லவா?

ப: இருக்கிறார்கள் ஒருவருக்கு 10 வயது, மற்றவருக்கு 5 வயது

கே: உம்முடைய மகளை இப்படியான அகால நேரத்தில் பொதுக் கூட்டங்களில் பேச விடுவதுண்டா?

ப: எனது மக்களை மேடைக்கு அழைத்துச் செல்வதில்லை. அதற்குக் காரணம் மற்றவர்களை விடத் தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுவிடக் கூடாது என்பதுதான்.

கே: 10 வயதுப் பெண் பிள்ளையை 5 மைல்களுக்கு அப்பால் இரவு எட்டரைக்கு மேல் நடக்கும் கூட்டத்தில் பேசவிடுவது தப்பானதா?

ப: பெண்களுக்குப் பாதுகாப்பான இடம் என்றால் அது இலங்கையிலேயே வல்வெட்டித்துறைதான்! (சிரிப்பு) வயது வந்த பெண்கள் கூட இரவு எந்நேரமும் தன்னந்தனியாக பஸ்ஸுக்காக நிற்பதை சாதாரணமாகக் காணலாம்!

தொடர்ந்து திரு' துரைரத்தினம் பதிலளித்துக் கூறியதாது:

'அர்ச்சுனராசாவின் கொலையோடு அரசியலைச் சம்பந்தப் படுத்துவது அபாண்டமாகும் நான் அர்ச்சுனராசாவின் மரணச் சடங்குகளுக்கும் சென்றேன். அர்ச்சுனராசாவின் கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்ட முதல் எதிரியை நான் ஆஸ்பத்திரியில் வைத்துச் சந்தித்துப் பேசினேன். அவர் ஸ்ரீ எதிர்ப்புப் போராட்ட வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார் எமது கூட்டங்களில் நடராஜாவைப் பற்றி இந்த வழக்கோடு சம்பந்தப்படுத்தி எதுவுமே பேசப்படவில்லை. அப்படிப் பேசியிருந்தால் நான் உடனேயே தடுத்திருப்பேன்.

நீதியரசரின் கேள்விகளுக்குப் பதிலளித்த திரு. துரைரத்தினம், முதலாவது எதிரி விடுதலை செய்யப்பட்டபோது கொலைவழக்கில் நியாயம் வழங்கப்படவில்லையென்றும், யாரும் நிசாத்ததாகத் தான் நினைக்கவில்லையென்றும், தமிழ் காங்கிரஸ் தலைவரான திரு ஜி ஜி. பொன்னம்பலம், திரு நடராஜாவும் இவரது விடுதலைக்குக் காரணமாக இருந்தவர்கள் என்றோ தான் நினைக்கவில்லை என்றும் கூறினார்.

### பல்கலைக்கழகம்

கோட்டை, திங்கள் கடற்றொழிலாளர்கள் கடற்றொழில் துறையில் பட்டம் பெறுவதற்கான வாய்ப்பு விரைவில் ஏற்படும்.

நாட்டில் முதலாவது கடற்றொழில் பல்கலைக்கழகத்தை நிறுவியதும் கடற்றொழிலாளர்களுக்கு மேற்படிவாய்ப்பு கிட்டும்.

## ...மீதான விவாதம்

# ...ரத்திற்கு ...வு செய்தார்"

— தம்பு கந்தையா

...ற்கு ...தன்' ...மேயர் ...சையில் நான் ... அமர்ந்தி... ...ாதுமக்கள் ...சபைபாது ...கும் இங்கு ...கண்டிருந் ...பகடர் தலை ... பொலிஸ் ... தங்கியிருந் ... கந்தையா ... 1970-ம் ...திகதிமேயர் ...தெரிவுசெய் ...போட்டியும் ...ல மாதம் ...பாக நடந் ... பாகுபாடு ...தார்... ...களுக்கு, ...வந்த பால் ... நிறுத்தப் ... ஏழைத் ...ஷ்டப்பட்ட ...சிளங் குழந் ...த்தில் அடி ...துபற்றிசபை ...வில்லை. இத ...லவு திட்டத் ...கப்பட்டது,

மேயர் தன்இஷ்டம் போல் நடந்தார்,

வரவுசெலவுத்திட்டத்தை மேலதிக வரவு செலவு திட்டமாக்க அனுமதித்தோம் ஆனால் ஐந்தரைலட்சம்ரூபா பற்றுக்குறை வரவுசெலவு திட்டமாக மாறியிருக்கிறது சில அங்கத்தவரின் ஆதரவுடன் மேயர் இப்படிநடந்து சபையை கலைக்கக் கூடிய நிலைக்கு கொண்டுவந்தார். தான் மேயராக இருக்க வேண்டும், அல்லது சபை கலைக்கப் படவேண்டும் என விரும்பினார்.

ஐந்தரைலட்சம்ரூபா பற்றாக்குறை இருக்கும்போதே புதிய அலுவலகம் கட்ட முயற்சித்தார். ஒன்றேகால் லட்சம் செலவழித்து அலுவலகம் கட்டப்பட வேண்டுமா? இந்தக் கட்டிடம் அவசியமா? ஏற்கனவே கட்டடத்தை கட்டிய அதே ஒப்பந்தகாரர்தான் புதிய கட்டிடத்தை கட்டவும ஒப்பந்தமானார். அந்தக் கட்டிடத்தில் பல இடத்தில் வெடிப்பு ஏற்பட்டுள்ளது இந்த நிலையில் மீண்டும் அதே ஒப்பந்தகாரருக்கு எப்படி கொடுத்தார்?

பாதுகாவலர் நியமனம் எப்படி நடந்தது? 1 பாதுகாவலரைத் தெரிவு செய்ய திகதி ஒதுக்கப்பட்டது. 29 பேர் விண்ணப்பித்தனர், தகுதி இல்லையென்று மீண்டும் விளம்பரம் செய்யப்பட்டது. 123 பேர் விண்ணப்பித்தனர். முந்திய 29 பேரை விட்டு புதிதாக 4 பேர் எடுக்கப்பட்டனர், முறைப்படி நியமனம் நடக்கவில்லை. மாநகர சபை எல்லைக்குள் இருப்பவர்களுக்கே நியமனம் வழங்கவேண்டும் என்ற சபையின் முடிவு மீறப்பட்டது பாதுகாவலராக சுன்னாகத்தைச் சேர்ந்தவர் தெரிவு செய்யப்பட்டார்.

69-ம் ஆண்டு திரு. நாகராசா ஒரு ஒழுங்கையில் 10 கம்பங்கள் போட்டிருந்தார். ஆனால் அங்கு இன்னும் வேலை பூர்த்தி செய்யப்படவில்லை. ஆனால் மேயர் தனது வட்டாரத்தில் ஒரு றோட்டுக்கு மின்சாரம் வழங்க 37,000 ரூபா செலவு செய்தார். மேயர் கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபா தனது வட்டாரத்திற்கு 1 வருடத்தில் செலவு செய்தார். சில அங்கத்தவர்களின் வட்டாரங்களைப் புறக்கணித்து நீதியற்ற முறையில் வஞ்சகமாக நடந்துகொண்டார்.

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த மாதம் 500 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

பாணந்துறை, திங்கள் அடுத்த மாதம் காட்டை அழித்து விவசாயம்செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இதனால் 500 இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படலாம் எனத் தெரிகிறது.

சிங்கராஜ அடவியாவில் இருந்து காடாக அமைந்துள்ள பெருந்தொகையான இடம் திருத்தப்பட்டு பாஷன்பழம் அப்பிள் பழம், கறுவா, காய்கறி ஆகிய வற்றைப் பயிரிட அரசாங்கம் திட்டமிட்டுள்ளது இத்திட்டத்தை அடுத்தமாதம் அமுல்நடத்த திட்ட, வேலைவாய்ப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அடுத்தவாரம் களுத்தறை மாவட்டத்திலுள்ள எட்டு தேர்தல் தொகுதிகளிலுமிருந்து இத்தேர்வுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும்.

தேர்ந்தெடுக்கப்படும் இளைஞர் 500 பேரும் முதலில் 40 மைல்நீளமுள்ளதாக மற்றுபற்று, தினியவெல, அகலவத்தை ஆகிய இடங்களுக்குப் பாதைகள் அமைக்க வேண்டும். பின்னர் ஒவ்வொருவருக்கும் 3 ஏக்கர் நிலம் மேற்படி பயிர் செய்கைக்காக வழங்கப்படும் வருடா வருடம் இத்திட்டத்துக்காக மேலும் 500 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். இத் திட்டத்துக்காக அரசாங்கம்ஒன்றரைக்கோடிரூபா ஒதுக்கியுள்ளது- இலவ ஹெவசா இளைஞர் திட்டத்தினால் எத்தனையோ இளைஞர்கள் மாதாந்தம் 1500 ரூபா வருமானமாகப் பெறுகிறார்கள் என திருநியுட்டன்பெரேரா தெரிவித்தார்- இத்திட்டத்துக்கு அமைச்சர் கொல்வின் ஆர் டி சில்வாவுடன் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் திருதயாபாஸ்குவல் மங்களமுனசிங்க ஆகியோர் உறுதுணையாகவுள்ளனர்:

## பயிற்சி பெறுகின்றனர்

அம்பன், திங்கள் பட்டதாரிகள் பயிற்சியில் தெரிவு செய்யப்பட்டவர்களில் வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி கந்தோரில் பின்வருவோர் பயிற்சி பெறுகின்றனர்:-

செல்விகள்: சின்னத்துரை விசாகரத்தினம், செல்லையா சௌபாக்கியம்மா, கார்த்திகேசு புவனேஸ்வரி, இரா ஜெயதேவி, மு லீலாவதி. திரு: க ஜீவரட்ணம், ந.பரம்சோதி.

## விநியோகிக்கவும்


அம்பன், திங்கள் கூட்டுறவுச் சங்கங்களின் இருப்பில் அரிசி வகை ஏதுவாகிலும் இருந்து பழுதடையும்அறிகுறிகாணப்பட்டால் அதனை உடனடியாகப் பாவனையாளர்களுக்குஅவர்களின் விருப்பத்துடன் விநியோகிக்கும் படி உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி சங்கங்களுக்கு அறிவித்துள்ளார்.


## கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY நீர்ப்பாசன பம்புகள்

* மணிக்கு 10,000 கலன்
* குறைந்த இயக்கச் செலவு
* பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன. மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல்/ மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இன்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இன்டஸ்ரீஸ் தயாரிப்பு

சக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல: 37/39, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு. ஏ. ஸி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031


## இரக்கம் காட்டப்பட மாட்டாது

கோங்டை, திங்கள் இலங்கை பெட்ரோலியம் கூட்டுஸ்தாபன தலைவர் திரு பி. ஆர். எஸ் ஆர் குமாரசாமி கூட்டுஸ்தாபன ஊழியர்கள் நாசவேலைகள் செய்வது கண்டுபிடிக்கப்பட்டால் அவர்கள் மேல் இரக்கம் காட்டப்படாது எனவும் கடும் நடவடிக்கையெடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

## தேயிலைத் தோட்ட விசாரணைக்குழு

கோட்டை, திங்கள் பெரிய தேயிலைத்தோட்டங்களை எவ்வாறு நிர்வகிக்கலாம் அவற்றை எப்படிப் பயன் படுத்தலாம் என்பது குறித்து ஆராய்ந்து சிபார்சு செய்ய தோட்டத் தொழில் அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வாவினால் ஒரு விசாரணைக்குழுவை நியமிக்கப்பட்டுள்ளது.

தோட்டத்தொழில் அமைச்சின் உதவியமைச்சர் சிருடொறிக் டி சொய்சாவினால் மேற்படி குழு நியமனம் பற்றி நேற்று முன்தினம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஆசிரியர் தற்கொலை

பருத்தித்துறை திங்கள் கரணவாய் மகாவித்தியாலய பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியரான திரு சின்னத்தம்பி ஹரிஹர சரவணபவான் வயது (26) நேற்று முன்தினம நச்சுத்திராவகம் அருந்தி மரணமானார். அல்வாயைச் சேர்ந்த இவ்விளம் ஆசிரியர் தமக்கேற்பட்ட தாங்கொணு நோய் காரணமாகவே தற்கொலை செய்து கொண்டாரென சாட்சியங்களைப் பதிவு செய்த மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

இவ்வாசிரியர் கடந்த ஆண்டே பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலிருந்து வெளியேறியவரென்பதுகுறிப்பிடத்தக்கது.

## பஸ்சேவை சீர்கேடு

யாழ்ப்பாணம், செவ். காரைநகர் யாழ்ப்பாணம் பஸ்சேவை சீர்குலைந்து வருகிறது. அரசாங்க உத்தியோகத்தர்கள் காலையில் குறிப்பிட்ட நேரத்துக்கு வேலைக்கு வரமுடியவில்லை தனியார் ஸ்தாபனஊழியர்களும் கடமைக்கு பிந்திப்போக வேண்டியுள்ளது. இதை யாழ் இ. போ. ச. அதிகாரிகள் மனம் வைத்தால் சீரடையச் செய்ய முடியும்.'

இவ்வாறு காரைநகர் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்கக் காரியதரிசி திரு ச. செல்லத்துரை நேற்று யாழ் டிப்போ அதிபரிடம் நேரில் பேச்சுவார்த்தை செய்தபோது கூறினர்.

வடடுக்கோட்டை ஆ. உ. திரு ஏ. தியாகராசாவுக்கும் மகஜர் அனுப்பி வைக்கப்பட்டது. (கு.வி.ம)

## தீக்காயத்துடன் குழந்தை அனுமதி

பருத்தித்துறை, திங்கள் நேற்று நண்பகல் மூன்று வயதுக் குழந்தை ஒன்று பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில்படுமோசமான எரிகாயங்களுடன் அனுமதிக்கப் பட்டுள்ளது ... குழந்தையின் நிலைமை மிக ஆபத்தாக இருப்பதாகத் தெரிகிறது.

# செய்திச் சுருக்கம்

### பண்டமாற்று ஒப்பந்தம்

தோட்டத்தொழில் அமைச்சு பாகிஸ்தானுக்கு இலங்கை வழங்கும் பாக்குக்குப் பதிலாகப் பாகிஸ்தானிடமிருந்து தோடம்பழத்தை பண்டமாற்று முறையில் பெறுவதற்கு பண்டமாற்று ஒப்பந்தம் ஒன்றைச்செய்யத் தீர்மானித்துள்ளது.

0 0 0

### 'பியூஜி'

ஏபரல் 14ந் திகதி யப்பானிய ஆராய்ச்சிக்கப்பலான 'பியூஜி' இலங்கை வருகிறது இக்கப்பல் யப்பானிய அரசாங்கத்தின் ஆராய்ச்சிக் கப்பலாகும்.

0 0 0

### வேலையில்லாபிரச்னை தீர்க்க ஆராய்ச்சி

இலங்கையிலுள்ள வேலையில்லாப்பிரச்னையை தீர்த்து வைப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கென பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் வேண்டுகோளுக்கிணங்கி இலங்கை வந்துள்ள சர்வதேச தொழில் நிறுவனத்தின் பரிசீலனைக் குழு இம் மாசம் 25ம் திகதி தனது ஆராய்ச்சியை மேற்கொண்டுள்ளது சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் நிபுணர்களைக்கொண்ட இக்குழு இலங்கையில் வேலையில்லாப் பிரச்னைக்கான காரணங்கள் வற்றைத் தீர்த்து வைக்க என்னென்ன செய்யலாம் என்பது குறித்து ஆராய்கிறது.

0 0 0

### உறங்கும் ஊழியர்மேல் நடவடிக்கை

இலங்கைப்போக்குவரத்து சபைத் தலைவர் திரு அனில் முனசிங்க மேலதிக வேலை நேரங்களில் வேலைசெய்யாது நித்திரைசெய்யும் இ. போ. ச. ஊழியர்கள்மேல் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை செய்துள்ளார். மேலதிக வேலைசெய்யும் ஊழியர்கள் பலர் வேலை செய்யாதுஉறங்கியது கண்டு பிடிக்கப்பட்டு தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதையடுத்தே இ. போ ச தலைவர் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார் எனத் தெரியவருகிறது.

0 0 0

### கூ. மொ வி ஊழியருக்கு சலுகைகள்

கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபன ஊழியருக்கு அவர்களது ஒன்றரை மாதச் சம்பளத்தை போனஸ் பணமாக வழங்க கூ மொ வி ஸ்தாபனம் தீர்மானித்துள்ளது கூ. மொ வி தலைவரான திரு ஆர் ஐ ஒபயசேகராவுக்கும் தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் சனிக்கிழமையன்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கடமையில் ஈடுபட்டிருக்கும் கூ மொ வி ஊழியர் மரணமடைந்தால் அவர்களது பிள்ளைகளில் ஒருவருக்கு கூ மொ வி ஸ்தாபனத்தில் தொழில்வழங்குவது, யாழ்ப்பாணம், குருநாகல். காலி, மாத்தறை. கண்டி. பதுளை ஆகிய இடங்களிலுள்ள கூ மொ வி ஸ்தாபன ஊழியருக்கு வைத்திய வசதி கொடுப்பது எனவும் மேற்படி பேச்சுவார்த்தையின்போது தீர்மானிக்கப் பட்டுள்ளது.

0 0 0

### பெருமளவில் சீனிமூடைகள் கைப்பற்றப்பட்டன

எட்டியாந்தோட்டையில் உள்ள கடையொன்றின் மாடியில் இருந்து எட்டியாந்தோட்டைப் பொலிஸார் பெருமளவில் சீனி மூடைகளைக் கைப்பற்றியுள்ளனர் இக்கடைக்குச் சொந்தக்காரரையும் பெ லிஸ் இன்ஸ்பெக்டர் திரு ஐ எம் சில்வா கைதுசெய்து அவிசாவளை மாஜிஸ்டிரேட் முன்னிலையில் ஆஜர்செய்தார். நீதிபதி இவரை ஏப்ரல் 5ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

0 0 0

### திருப்பணி சபையின் தீர்மானம்

நாட்டின் பல பகுதிகளிலும் பிரதேச குழுக்களை அமைக்கும் வேலையில திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணி சபை ஈடுபட்டுள்ளது நீர்கொழும்பு, நுவரெலியா, மாத்தளை, கண்டி, திருக்கோணமலை, பண்டாரவளை முதலிய இடங்களில் பத்துப் பிரதேசக் குழுக்களை அடுத்த மாதத்தில் அமைக்கச் சபை தீர்மானித்துள்ளது.

0 0 0

### கூட்டுஸ்தாபன உணவு உற்பத்தி போட்டி

உணவுஉற்பத்திப்போட்டியொன்றை அரசாங்க கூட்டுஸ்தாபனங்களிடையில் நடாத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது. மரக்கறி வகைகள் வெங்காயம் மிளகாய் ஆகியவற்றை கூட்டு ஸ்தாபனங்களின் காரியாலயங்கள் அமைந்துள்ள காணிகளில் கூட்டுஸ்தாபனஊழியர்கள் பயிரிடவேண்டும். இப் பயிர்ச்செய்கையை ஆக்கக்கூடுதலாகச் செய்யும் கூட்டுஸ்தாபன ஊழியருக்கு அரசாங்கம் பரிசுகளை வழங்கவுள்ளது.

0 0 0

### கூட்டுறவு அபிவிருத்திச்சபை

கூட்டுறவு அபிவிருத்திச் சபையொன்றை நிறுவுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இலங்கையின் கூட்டுறவுத்துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கம் கொண்டு நிறுவப்படவிருக்கும் இச் சபை கூட்டுறவு ஆணையாளரின் கீழ் இயங்கும். காலத்துக்குக் காலம்கூட்டுறவுத்துறையை அபிவிருத்திசெய்ய என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது குறித்து இச் சபை அரசாங்கத்துக்கு அவ்வப்போது ஆலோசனைகள் வழங்கும்.

0 0 0

### உரிமை கோரலாம்

முடிக்குரிய காணிகளில் சட்டவிரோதமாகக் குடியேறி அக்காணிகளை அபிவிருத்திசெய்து பல்வேறு பயிர்ச்செய்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள் அக்காணிகளின் உரிமையைக் கோரலாம் எனத் தெரியவருகிறது.

காணியற்றவர்களுக்கு விவசாயத்தின் பொருட்டு அரசாங்க காணிகளில் குடியேறியவர்களுக்கு சட்டரீதியில் அக்காணிகளுக்கான உரிமையை அளிக்கும் நடவடிக்கை எடுக்க காணி விவசாய அமைச்சு உத்தேசித்துள்ளது.

## கம்யூ- வாலிப முன்னணிக்கிளை

முல்லைத்தீவு, திங்கள் வவனியா வடக்கு நெடுங்கேணியில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வாலிப முன்னணிக்கிளையை கட்சியின் வவனியா மாவட்டக்கிளைச் செயலாளர் திரு. வ க கணேசவேல் அங்குரார்ப்பணம் செய்துவைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வெறும் சுலோகங்களால் அபிவிருத்தி ஏற்படாது"

கோட்டை, திங்கள் 'நாம் வெறும் சுலோசங்களால் நாட்டை அபிவிருத்தி செய்யவோ அல்லது மக்கள் வாழ்க்கைத் தரத்தையுயர்த்தவோ முடியாது. இன்றையசூழ் நிலையில் ஆக்க பூர்வமான வேலைகளைக் கவனிக்க வேண்டியதே முக்கியம்' என வெள்ளிக்கிழமையன்று தப்ரமுன் ஒட்டலில் நடைபெற்ற இலங்கை தீப்பெட்டி உற்பத்திச் சங்கத்தின் வருடாந்த இராப்போசன விருந்தின்போது உரையாற்றிய சங்கத் தலைவர் திரு ஏச் ஈ பி டிமெல் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: நாங்கள் தீப்பெட்டி உற்பத்தியை 1930-ம் ஆண்டில் ஆரம்பிக்கையில் அரசாங்கத்திடம் இருந்து எந்தவிதமான உதவியையும் பெறவில்லை. இதைவிட வேறு விதமான எதிர்ப்புகளும் எங்களுக்கு இருந்தது. இத்தகைய எதிர்ப்புகளுக்கிடையில் நாட்டின்மேல் ஏற்பட்ட பற்றுக்குறை காரணமாக எங்களிற் சிலர் இத்தொழிலை ஆரம்பித்தோம். நாட்டைக் கைத்தொழில் மயமாக்கி அதன் பொருளாதார சுபீட்சத்தைக் காணவே நாம் விரும்பினோம். இத்துடன் எங்கள் மக்களுக்கு வேலைவாய்ப்பளிக்கவும் விரும்பினோம் இத்தொழிலால் எங்களுக்கு எந்தவிதமான இலாபமும் கிடைக்கவில்லை. பதிலுக்கு எம்மில் பலருக்கு நஷ்டமே பேறபட்டுள்ளது'

இவ்வாறிருக்க எங்களை முதலாளித்துவவாதிகள் என்று குறிப்பிடுவதையிட்டு நாம் வருந்துகிறோம். இவ்வாறு கூறும் மக்கள் தங்கள் நாட்டுக்கு ஒருவிதமான உதவியும் செய்யவில்லை அவர்கள் மக்களுக்கு வேலைவாய்ப்போ அல்லது அவர்களின் வாழ்க்கைக்கு வேண்டிய எந்தவித நன்மையோ செய்யவில்லை'

அரசியல் திட்ட

# அலுவல்களை ஒத்திப்போட மகாசங்கம் கோரிக்கை

கோட்டை, திங்கள் 'அவசரகாலச் சட்டம் நடைமுறையில் இருக்கும் வரை உத்தேச அரசியல் திட்டத்தோடு தொடர்புடைய வேலைகள் யாவற்றையும் ஒத்திவைக்கவும்"

மல்வத்த அஸ்கிரிய பீடங்களைச் சேர்ந்த அநேகமான பௌத்த பிக்குகள் மேற்கண்டவாறு அரசியல் திட்ட விவகார அமைச்சர் டாக்வுர் கொல்வின் ஆர் டி சில்வாவைக் கோரியுள்ளனர்

வண பரவஹர பஞ்ஞனந்தநாயக்க தேரோ தலைமையிலான மகா விகார வன்சிக மகா சங்க சபா மேற்படி கோரிக்கையை விடுத்துள்ளது.

'உத்தேச அரசியல் திட்டத்தின் மீதான அடிப்படைத் தீர்மானங்களை நாட்டில் அவசரகால நிலைமை நடைமுறையிலுள்ள வேளையில் ஏற்றுக்கொள்ளுதல் ஜனநாயகம் சோஷலிசம் ஆகிய இரண்டுக்கும் முரண்பட்டதாகும்' என மேற்படி மகா சங்க சபாவின் தலைவர் வண. தேரோ குறிப்பிட்டுள்ளார்

அவர் மேலும் இவ்விடயமாகப் பேசுகையில் குறிப்பிட்டதாவது: அவசரகாலச் சட்ட விதிகள் அடிப்படைத் தீர்மானங்கள் குறித்துச் சுதந்திரமாக ஆராயவோ அல்லது அபிப்பிராயம் கூறவோ இடமளிக்கா இந்த அடிப்படைத் தீர்மானங்கள் சுதந்திரமாக விவாதிக்கவும் ஆராயப்படவும் அனுமதிக்கப்படாவிட்டால் அச்செய்கை சர்வாதிகாரத்தையே குறிக்கும். இத்தகைய ஓர் அரசியல் திட்டத்தை ஏற்றுக்கொள்வதும் சோஷலிசத்துக்கு முரணானதாகும்

——

## 'நிரந்தரமாக்குக'

மாவிட்டபுரம், ஞாயிறு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அதிபராக இருந்த திரு. தெ. து. ஜெயரத்தினம் சென்ற ஜனவரி முதல் ஒய்வு பெற்றதால் அவரது இடத்தில் பதில் அதிபராகக் கடமையாற்றும் திரு. மா. மகாதேவனை நிரந்தர அதிபராக நியமிக்கவேண்டும் என அரசாங்கத்தைக் கோரும் தீர்மானம் ஒன்று மகாஜனக்கல்லூரி பெற்றோர்-ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

கல்லூரியை மேலும் அபிவிருத்தி செய்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராயப்பட்டதுடன் இளைப்பாறிய அதிபர் தெ. து ஜெயரத்தினத்தை சங்கத்தில் ஆயுள்கால அங்கத்தவராக நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

## 'மண்டைதீவில் நடாத்துக'

மண்டைதீவு, திங்கள் 'விசுவமடு 2-ம் பருவம் ஏற்று நீர் பாய்ச்சத் திட்டத்திற்கான காணிக்கச்சேரிக்கு தீவுப்பகுதியில் மண்டைதீவில் இருந்தே கூடிய விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளனர் எனவே காணிக் கச்சேரியை மண்டைதீவிலேயே கூட்ட வேண்டும்

மேற்கண்டவாறு கோரும் தீர்மானமொன்றை மண்டைதீவு விவசாய இளைஞர்கள் தீவுப்பகுதி காரியாதிகாரிக்கும் ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கும் அனுப்பியுள்ளனர்.

மேற்படி காணிக்கச்சேரி ஏப்பிரல் மாதம் 28-ம் திகதி ஊர்காவற்றுறை காரியாதிகாரி அலுவலகத்தில் நடைபெற இருப்பதையடுத்தே மேற்படி தீர்மானம் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

## இரு நாடகங்கள்

நெல்லியடி திங்கள் துறையாமூலை இலங்கேஸ்வரன் கலாமன்றத்தின் காவியத் தலைவன் என்ற சமூக சீர்திருத்த நாடகமும் தணியாத தாகம் என்ற வரலாற்று கற்பனை நாடகமும் இம்மாதம் 31-ந் திகதி இரவு மந்திகை அம்மன் ஆலய முன்றலில் மேடையேற்றப்படவிருக்கின்றன.

.....

## உபதபால் நிலையம்

சண்டிலிப்பாய், திங்கள் சண்டிலிப்பாய் சந்திக்கு அருகாமையில் புதிதாக உபதபால் நிலையம் மேமாத முற்பகுதியில் திறக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகிவிட்டன என்று உடுவில் தொகுதி ஸ்ரீ லங்கா சுதந்திர [illegible] அமைப்பாளர் [illegible] விநோதன் தெரிவித்தார்.

# இன்றைய பலன்

பங்குனி மாதம் 16-ம் திகதி (30-3-71)

மேஷம்- நலிவு தரும் சம்பவங்கள் இடம்பெறும். பொதுவாக நாவடக்கம் விரும்பத்தக்கது. திடீர் முடிவு ஆபத்தை விளைவிக்கும்.

ரிஷபம்- அதிகாரப் பேறுக்கும் அதிக பொருள் வரவுக்கும் இடமுண்டு ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள்.

மிதுனம்- குடும்பக் கவலை தலைதூக்கும். பிதாவழி பிணக்குக்கும் இடமுண்டு. அன்னியர்கள் மூலம் தொல்லைகள் தோன்றிமறையும்

கடகம்- வாழ்க்கையில் சில முன்னேற்றமான சம்பவங்கள் இடம்பெறும், வாகன விருத்திக்கு இடமுண்டு.

சிம்மம்- இதயத்தின் ஏக்கம் இன்று கனியும். தேடிய பொருள் இன்று காலடியில் சரணடையும். செல்வாக்குப் பெருகும்.

கன்னி- கருடப்பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம் போடுவார்கள்.

துலாம்- வாழ்க்கை இன்று மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும். குடும்பத்தில் அமைதிநிலவும் சிறப்பான தினம்

விருட்சிகம்- துள்ளிவரும் வெள்ளிப்பணம் உங்கள் வாழ்க்கையைச் சோபிதமடையச் செய்யும்.

தனுசு- தக்கசமயத்தில் தந்தையின் ஆதரவு கிடைக்கும். தெய்வ நம்பிக்கை மேவிடும். இன்று தித்திப்பான தினம்.

மகரம்- பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம். வெளியிடத் தொடர்புகள் பெருகும்.

கும்பம்- சகோதர பாசம் தலைதூக்கி நிற்கும். பிதா வழிச் சுகம் கிடைக்கும். கைத்தொழில் விருத்திக்கும் இடமுண்டு.

மீனம்- மனதில் விரக்தி நிலை தெனபடும் உடல் நலமும் பாதிக்கப்படலாம். கால்நடைகளினால் நஷ்டமேற்படலாம்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## சேவைக்கு பாராட்டு

மாவிட்டபுரம், திங்கள் காங்கேசன்துறை மனநோயாளர் சிகிச்சை நிலையத்தில் பலவருடங்கள் கடமையாற்றி அருஞ்சேவையாற்றி இடமாற்றம் பெற்றுச் சென்ற டாக்டர் எஸ் அருளம்பலத்தின் உருவப்படம் காங்கேசன்துறை மனநோயாளர் வைத்திய சாலையில் திரைநீக்கம் செய்யப்பட்டது.

யாழ் சுகாதார அத்தியட்சகர் எஸ். இராசரத்தினம் தலைமையில் நடந்த அக்கூட்டத்தில் இவரின் உருவப்படத்தை மல்லாகம் நீதிபதி எஸ் ஆனந்தகுமாரசாமி திறந்துவைத்து அவரின் சேவையைப்பாராட்டிப் பேசினார்.

வைத்தியசாலை ஆண்தாதி எஸ். சிவபாலசிங்கம் உட்பட பலர் இவரின் சேவையைப் பாராட்டினார்கள்.

......

## மருதடியில் திருக்கேணி

சுழிபுரம், திங்கள் மானிப்பாய் மருதடி விநாயகர் கோவில் முன்றலில் பல்லாயிரக்கணக்கான [illegible] திருக்கேணி [illegible] ளது.

# 'கலை எமக்களிப்பது ஊதியமல்ல; உயிர்'

வெள்ளவத்தை, திங்கள் 'ஈழத்தில் தமிழ் நாடகம் வளரவில்லை என்று காட்டுக் கூச்சல் போடுகிறார்கள். உண்மையில் தமிழ் நாடகங்கள் வளரவில்லையா? எமது 'டயல் எம் போர் மேடர்' என்ற துப்பறியும் நாடகத்தைப்பார்த்த பிறகாவது தமிழ்நாடக உலகில் எவ்வளவு சாதனை புரிந்துவிட்டோம் என்பதை உணர்வீர்கள். துப்பறியும் நாடகமா அதில் என்ன இருக்கிறது என்று சிலர் எழுந்து போகக்கூடும். ஆனால் கலையை எந்தெந்தக்கோணங்களிலெல்லாம் பயன்படுத்தமுடியுமோ அந்தந்தக் கோணங்களிலெல்லாம் பயன்படுத்தி எமது திறமையை வெளிக்காட்ட நாம் தயங்கமாட்டோம், வரவர தமிழ்நாடக ரசிகர்களின் தொகை அதிகரித்துவருகிறது. இது எமக்கு மகிழ்ச்சியளிக்கிறது. கலை எமக்களிப்பது ஊதியமல்லஉயிர்.

இவ்வாறு பொரளை வை எம் பீ ஏ மண்டபத்தில் நடைபெற்ற விட்டிக்ஸ் ஸ்டேஜ் குழுவினர் அளித்த மக்கீனின் 'டயல் எம் போர் மேர்டர்' என்ற நாடகத்தில் கலந்து கொண்ட நடிகர்களைப் பாராட்டிப் பேசுகையில் தி. அந்தோனிஜீவா கூறினார்.

நாடகத்தில் கலந்து கொண்ட நடிகர்கள் அனைவருக்கும் மலர்மாலை சூட்டப்பட்டது. நடிகை ஹெலன்குமாரிக்கு மன்றத்தின் சார்பில் திருமதி மதீன் வாகனம் வெள்ளித்தாம்பாளம் பரிசளித்தார்.

......

## வரதர் பல குறிப்பு அறிமுகவிழா

யாழ்ப்பாணம், செவ்வாய் வரதரின் பல குறிப்பினதும் வெள்ளி மாத சஞ்சிகையினதும் அறிமுகவிழா நாளை மாலை 5 மணிக்கு மலாயா கபே மேல்மாடியில் நடைபெறவுள்ளது.

செங்கை ஆழியான் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ்வறிமுகவிழாவில் இரசிகமணி கனக செந்திநாதன் வெளியீட்டுரை நிகழ்த்துவார்.

கவிஞர் மு. கந்தவனம், டொமினிக்ஜீவா, காரை. செ. சுந்தரம்பிள்ளை, சொக்கன் ஆசியோர் சிறப்புரை நிகழ்த்துவர்.

......

## சித்தன்கேணியில் வங்கிக்கிளை நிறுவுக

சுழிபுரம், திங்கள் வட்டுக்கோட்டைத் தொகுதியின் மத்திய இடமான சித்தன்கேணிச் சந்திக்கு அருகாமையில் இலங்கைவங்கிக்கிளையொன்றை உடன் திறக்க நடவடிக்கை எடுக்குமாறு வட்டுக்கோட்டைத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு ஆ தியாகராசா இலங்கை வங்கி அதிபரையும் நீதியமைச்சரையும் வேண்டியுள்ளார்.

## சிரமதானம்

மண்டைதீவு, திங்கள் பகிரங்க வேலைப்பகுதியினரால் விரைவில் பூர்த்தியாகும் தறுவாயில் இருந்த மண்டைதீவு கிழக்குப் பிரதான வீதியை விஸ்தரிக்கும் வேலைகளை மண்டைதீவு உதயசூரியன் சன, சமூக நிலையத்தவர்களும் மண்டைதீவு கிழக்கு கிராமமுன்னேற்றச்சங்க அங்கத்தவர்களுமாகச் சேர்ந்து சிரமதானம்மூலம் நேற்றுமுன்தினம் செய்து முடித்தனர்.

## தபாலமைச்சர் நெல்லண்டை வருவார்

யாழ்ப்பாணம், செவ். தபால் அமைச்சர் திரு செல்லையா குமாரசூரியர் அடுத்தமாத முற்பகுதியில் நெல்லண்டைக்கு விஜயம் செய்யவிருப்பதாகத் தெரிகிறது.

நெல்லண்டை ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சிக் கிளைத்தலைவர் திரு ஆர். அருளானந்தனின் அழைப்பை ஏற்று நெல்லண்டைக்கு விஜயம் மேற்கொள்ளும் அமைச்சருக்கு பிரமாண்டமான வரவேற்பளிக்க ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இவ்வரவேற்பில் பருத்தித்துறைப் பகுதியில் உள்ள சகல தபால் அதிபர்களும் உபதபால் கந்தோர் அதிபர்களும் கலந்துகொள்வார்களாம்.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**


★ உறுதியானதும்
★ நீடித்து உழைப்பதும்
★ தன்னிகரற்றதுமான

"வைத்திலிங்கம்ஸ்"

இரும்பு - பித்தளை - மரஸ்குறு ஆணிகளை நீங்கள் வாங்குவதனால் ஒரு சிறந்த பொருளை வாங்குவதோடு உள்நாட்டு உற்பத்தியையும் வளர்க்கின்றீர்கள் என்பதை மறவாதீர்கள்.

தயாரிப்பாளர்:
என். வைத்திலிங்கம் நிறுவனத்தார்
இரும்பு வியாபாரிகள்
450, பழைய சோனக தெரு, கொழும்பு-12
தொலைபேசி: 33143 - 4
கிளை: 138, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 530


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மேயர் தனது வட்டார...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

துரைசிங்கம் என்பவர் மீது குற்றச்சாட்டு சுமத்தி வேலை நீக்கினர். மற்றொரு ஊழியரை கட்டாய ஓய்வில் செல்லும்படி செய்தார். ஆனால் தனக்கு ஆதரவான ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டபோது சிறு தண்டனை விதித்து திரும்பவும் வேலையில் அமர்த்தினார்.

உதவி மேயர் திரு ஏ. துரைராஜசிங்கம் கூறியதாவது இப் பிரேரணையில் சில விஷயங்கள் நியாயமாக இருக்கலாம், ஆனால் இப் பிரேரணை அவசியமா என்பதை ஆலோசிக்க வேண்டும். அதிகாரங்களை மேயரிடம் கொடுத்து விட்டு, பின் குறை சொல்லலாமா? அதிகாரத்தை கொடுத்தது உறுப்பினர்தான். மாநகர சபை ஊழியரை நீக்கக் கூடாது. உறுப்பினர்களாகவந்ததும், வெட்டுவோம், புடுங்குவோம் என்ற எண்ணத்தில் கடமையாற்றக்கூடாது.

திருமதி ஏ சுவாமிநாதர், இந்தசபையில் 23 பேர்கள் தான் உறுப்பினர்கள். ஆனால் 24, 25, 26, 27, 28, 29-ம் வட்டார அங்கத்தவர்கள் போல் வெளியார் சிலர் இங்கு நடந்துகொள்கிறார்கள் சகுனிபோல், நாரதர் போல், நயவஞ்சகமாக சுயநல நோக்கத்துடன் சிலர் நடந்து கொள்கிறார்கள். இதன்காரணமாகத்தான், நம்பிக்கையில்லா தீர்மானத்தில் கையெழுத்திடவேண்டியநிலை ஏற்பட்டது. இங்குள்ள சில உறுப்பினர்களை தவிர மற்றவர்கள் எல்லாரும் மூலைக்குமூலை, குசுகுசு கூட்டங்கள்கூடி, மேயர் ஏன் இறங்கவில்லை என்று பேசி கொண்டது என் காதிலும் விழுந்தது. தாங்கள் நினைத்ததை துணிவுடன் செயலாற்றமுடியாமலிருந்தார்கள். நான் துணிவுடன் கையெழுத்துபோட்டேன். தனிப்பட்ட முறையில் மேயர்மீது எனக்குதுவேஷம் இல்லை. இன்றுவரை ஒருவரையாவது வேலைக்கு எடுக்கும்படி நான் அவரிடம் கேட்கவில்லை.

இக்கட்டத்தில் திரு ரி என் துரைராசா, தான் கடைசியாகப் பேசப் போவதாக தெரிவித்தார் திரு கே வி தெய்வேந்திரன் தான் கடைசியாகப் பேசப்போவதாக தெரிவித்தார்.

திரு துரையப்பா: யாரும் எப்பொழுதும் பேசலாம்

திரு நாகராசா: வழக்கமாக யார்மீது குற்றம்சாட்டப்பட்டதோ அவர் தான் கடைசியாக பேசவேண்டும்

திரு துரையப்பா: பிரேரணையை கொண்டுவந்தவர் கடைசியாக பேசலாம் அவர் விரும்பினால் அவருக்காக மற்றொருவர் பேசலாம்.

திரு. நாகராசா: மேயருக்கு எதிராகப்பிரேரணை இருப்பதால் அவர்தான் பேசலாம்.

திரு தெய்வேந்திரன்: இது சட்டத்திற்கு முரணானது. சட்டத்தில் அப்படி இல்லை. மேயர் பேசாவிட்டால் நான் பேசவில்லை.

திரு. துரையப்பா: இன்று மேயர் தலைமைதாங்கவில்லை ஆதலால்நீதிகிடைக்குமென எதிர்பார்க்கிறோம்.

டாக்டர் ஏப்பிரகாம்: மேயர்தான் பதில் கொடுக்க வேண்டும்

கமிஷனர்: மேயர் பேசிய பின் பிரேரணையைகொண்டு வந்தவர் பேசலாம்.

திரு. நாகராசா: நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு இரவோடு இரவாக சிலர் கையெழுத்திட்டனர்: இன்று எத்தனை பேருக்கு மேயர் பதவி தருவோம் என்று வாக்குறுதியளிக்கப்பட்டதோ தெரியவில்லை: குற்றம் சொல்லப் போனால் எவர் மீதும் குற்றம் சொல்லலாம். நான் மேயராக இருந்தபோது முஸ்லீம் சமுகத்தவருக்கு வேலை கொடுத்தேன். இதை மறுக்கமுடியுமா?

திரு. துரையப்பா: நம்பிக்கையில்லா தீர்மானத்திற்கு காரணம் காட்டவேண்டும் என்று சட்டமில்லை. நான் மேயராக இருக்கும் போது எதற்காக சபையை கலைக்கச் செய்தார்கள் சிலரின் வற்புறுத்தலினால் தான் சபையை கலைத்ததாக திரு. திருச்செல்வம் என்னிடம் கூறினார்.

திரு. வி. எஸ். துரைராஜா குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்துக் கூறியதாவது:-

திரு. இராஜசூரியரை அங்கத்தவராகக் கணிக்காததும் பொறியியலாளரை வேலை நீக்கம் செய்யாததும் என் மீது சுமத்தப்பட்ட குற்றங்களாகும், திரு. இராஜசூரியரை சபைக்கு வரக்கூடாதென சுப்ரீம் கோர்ட் தடை உத்தரவு போட்டுள்ளது. நான் செய்தது சரியா என்பது இப்பொழுது விளங்கும், பொறியியலாளரை வேலைநீக்கம் செய்யும்படி உத்தரவு வந்தது. அவர் நவீன மார்க்கெட் மற்றும் சில வேலைகளுக்குப் பொறுப்பாகவிருக்கிறார், புதிய ஒரு பொறியியலாளர் கிடைக்கும் வரை அவரை வேலை நீக்கம் செய்யவில்லை

பால்மா நிறுத்தப்பட்டதாக கூறப்பட்டது. பால்மா கொடுப்பதில் பல மோசடிகள் நடந்தது. சில கடைகளில் பொலிசார் பால்மா டின்களைக் கைப்பற்றினார்கள். வருடாவருடம், பால்மா விநியோகம் அதிகரித்தது. இதனால்தான் 12 வயது பிள்ளைகளுக்கு பால்மா வழங்குவதை நிறுத்தினேன். இதனால் வரியிறுப்பாளர் பணம் மிச்சமானது.

புதிய அலுவலக கட்டட வேலையை, இங்குள்ள உறுப்பினர் ஒருவரும் கூட சேர்ந்துதான் செய்தார் இன்று அவரே பிழைசொல்கிறார்.

1970-ம் ஆண்டு கொழும்புத்துறை வட்டாரத்தில் 20,000 ரூபா செலவு செய்யப்பட்டது பின் சுவாமியார் வீதிக்கு 50,000 ரூபாவும், ஆனந்தன் வடலிவீதிக்கு 17,000 ரூபாவும், செலவு செய்யப்பட்டது சென் மேரிஸ் லேன் வேலைகள் தொடர்ந்துநடக்கிறது. 1 பாதுகாவலரையும், 2 காவலாளிகளையும் காலியான இடத்துக்கு நியமித்தோம். ஸ்ரோரில் 10,000 ரூபா பித்தளைக் கம்பிகள் திருட்டுப் போனது அதனால், இராணுவத்திலிருந்தவரை பாதுகாவலராக நியமித்தோம். முதல்தடவையாக திருப்தியில்லாததால் மீண்டும் விளம்பரம் செய்தோம். 125 பேரில் ஒருவரும் இராணுவத்தைச் சேர்ந்தவர். ஆணையாளருடன் ஆலோசனை செய்து பரராஜசிங்கத்தை எடுத்தேன்.

முஸ்லிம் சமூகத்தவருக்கு வேலைகொடுக்கவில்லையென திரு. பஸீர் தெரிவித்தார். அவரின் வேண்டுகோளின்படியே ஒரு தமிழ் வாலிபனுக்கு வேலைகொடுத்தேன்

பெருமளவில் சைவமக்கள் வாழும் இப்பகுதியில் பசுமாட்டைவெட்டினால் இந்தியாவில் நடந்த பசுவதை எதிர்ப்புக்கலாட்டா போல் இங்கும் நடக்கும் என்றகாரணத்தால் அதனை அனுமதிக்கவில்லை.

திரு. தம்பு கந்தையா குற்றச்சாட்டுகளுக்கு மேயர் கொடுத்த பதில்கள் சரியாக இல்லை.

திரு கே எஸ் நடராசாவும், ஜனாப் எம். ஜி, பஷீரும் தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

மேயர்மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக 12 வாக்குகளும் எதிராக 7 வாக்குகளும் கிடைத்து நிறைவேறியது.

......

### நல்லூர் ஸ்ரீதியாகராஜ உற்சவம்

#### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்

நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலையில் யாழ்ப்பாணம் வட இலங்கை சங்கீதசபை நடாத்தும் ஸ்ரீதியாகராஜ உற்சவத்தில் இன்றைய நிகழ்ச்சிகளின் விபரம் வருமாறு.

பிற்பகல் 6-30 மணி செல்வி சௌபாக்கியலட்சுமி மாணிக்கம் பாட்டு, 7-15 லிங்கம் சகோதரர்கள் பாட்டு. 8-00 பொன். சுந்தரலிங்கம் பாட்டு, 8-45 செல்வி ஜெகதாம்பிகை பரமநாதன் பாட்டு, 9-30 திரு. கே. ஆர். நடராசா பாட்டு.

திருமதி நகுலேஸ்வரன், திரு. ஆர். எஸ். சர்வேஸ்வரசர்மா, எஸ் சோமாஸ்கந்தசர்மா ஆகியோர் வயலினும், செல்வன் எஸ். பிரணவநாதன், திரு. ரி. பாக்கியநாதன் ஆகியோர் மிருதங்கமும் வாசிப்பார்கள்.

......

### கி. பாகிஸ்தானில்

(1ம்பக்கத் தொடர்ச்சி)

களுக்கு மக்கள் மேலும் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துவருவதாகவும் போக்குவரத்துத் தகர்க்கப்பட்டிருப்பதினாலும் இராணுவம் பரசூட் துருப்புகளைப் பயன்படுத்திவருவதாகச் சொல்லப்படுகிறது.

#### மக்கள் படுகொலை

கடந்த வெள்ளிக்கிழமையும் சனிக்கிழமையும் நடந்த சண்டையில் அதிகமாகச் சிவிலியன்களே கொல்லப்பட்டனர். சாலைகளில் குழிகளைப் பறித்து. இராணுவப் போக்குவரத்திற்கு மக்கள் தடை ஏற்படுத்திவருகின்றனர். டாக்காவில் கடந்த வெள்ளிக்கிழமை நடந்த சண்டையில் பொலிசும் மக்களும் சேர்ந்து இராணுவத்தை எதிர்த்துப் போர் புரிந்ததாக அங்கிருந்து கிடைத்த இரகசியச்செய்தி யொன்று தெரிவிக்கிறது.

மாணவர்கள் கொரிலா முகாம்கள் அமைத்து இராணுவத்தை எதிர்த்து வருகின்றனர். இதனால் பஞ்சாப் பாகிஸ்தான் இராணுவத்தினரிடையே நடுக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அதனால் கண்ணில் படும்பொருள்களையெல்லாம் சுடுவதாகவும் ஆஸ்திரேலிய ரேடியோ தெரிவித்துள்ளது.

#### சிட்டகாங்கில் அமைதி

சிட்டகாங்பகுதியில் நிலைமை சீராகிவருகிறதென அரசு [illegible] அங்கே மாமூல்நிலைமைதிரும்பவில்லை என்பது பொருளாகிறது என அந்த ரேடியோ மேலும் தெரிவித்தது.

இராணுவத்தினருக்கு வெடிமருந்துகளைக் கொண்டு வந்த கப்பலொன்று சிட்டகாங் துறைமுகத்தில் நிற்பதாயும் வங்காள மக்களின் கடும் எதிர்ப்பு காரணமாக அக்கப்பலிலிருந்து இதுவரையும் வெடிமருந்துகளை இறக்க முடியாமல் இருப்பதாகவும் அந்த வானொலி நிருபர் அறிவித்துள்ளார்.

## "சிங்களச் சித்திக்கு போனஸ் வழங்கவேண்டும்"

தாவடி, திங்கள்

"மக்கள் அரசாங்கம் சிங்களம் சித்திபெய்திய உத்தியோகஸ்தர்களுக்கு 'போனஸ்' ஒன்றையும் கட்டாயமாகக் கொடுக்கவேண்டும் சிங்கள பாஷை எமது தமிழ்ச்சகோதரர்களின் பிறமொழி அப்படியிருந்தும் எமது உத்தியோகத்தர்கள் ஓய்வு நேரத்தில் நித்திரை விழித்துச் சிங்களத்தைப் படித்தச் சித்தியடைந்துள்ளது. போற்றுதற்குரியது"

மேற்கண்டவாறு கூசல் தொலை தொடர்பு உத்தியோகத்தர் சங்க யாழ். கிளையின் 14-வது வருடாந்தக் கூட்டத்தில் கலந்துரையாற்றிய மேற்படி சங்கத்தின் தாய்ச்சங்கத் தலைவர் திரு. எல். ஜி, டி. விக்கிரமசிங்கா கூறினார்.

திரு. எஸ். பி ஞானப்பிரகாசத்தின் தலைமையில நடைபெற்ற இக் கூட்டத்தில் மேலும் பேசிய திரு, விக்கிரமசிங்கா குறிப்பிட்டதாவது:

"இன்று தமிழ் ஊழியர்கள் சிங்களப் பாஷையில் சித்தியடைந்தும் சம்பள உயர்வின்றி இருப்பதைக் காணலாம் பிரச்னைகள் பற்றி நாம் நன்கு உணர்கின்றோம். தமிழ் உத்தியோகஸ்தர்களின் பிரச்னைகளை அரசாங்கத்திற்கு எடுத்துக்கூறி கூடிய சீக்கிரம் பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்போம்"

யாழ் கிளையின்உபதலைவர் திரு. எஸ். எஸ் குலநாயகம் பேசுகையில் மக்கள் அரசாங்கம் தொழிலாளர் துயர் துடைக்கும் என்பதில் எங்களுக்குப் பூரண நம்பிக்கையுண்டு என்றார்

## "யாழ்ப்பாணம் என்னைக் கவர்ந்து விட்டது"

பருத்தித்துறை, திங்கள்

'நான் யாழ்ப்பணத்திற்கு மாற்றலாகி வரும்போது பலர் என்னைப் போகவேண்டாமென எச்சரித்தனர் ஆனால் யாழ்ப்பாண மக்களின் பண்பும் அன்பும் என்னைக்கவர்ந்துவிட்டன'

இவ்வாறு வடமாநிலக் கல்வியதிபதி திரு. டபிள்யூ டி வி மகாந்தில நேற்று முன்தினம் பருத்தித்துறையைச் சேர்ந்த புலோலி இந்துக்கல்லூரிப் புதிய கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்துத் தமிழில் பேசும்போதுகுறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு வி தம்பிபபிள்ளை தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய திரு மகாந்தில கூறியதாவது:

ஆசிரியர் பெற்றோர், கல்விப்பகுதி அதிகாரிகள் ஆகியோரிடையே நெருங்கிய ஒத்துழைப்பிருந்தால் எந்தக் கல்வி நிறுவனமும் முன்னேற முடியும். இன்றுமாணவர் மத்தியில் ஒழுக்கீனம் அகில உலகரீதியாகத் தலைதூக்கியுள்ளது ஆசிரியர் தமது மாணவரின்நல்லெண்ணத்தையும் நம்பிக்கையையும் பெறறால் இப்பிரச்னையைச் சுலபமாகத் தீர்க்கலாம் துப்பாக்கியும் குண்டாந்தடியும் சாதிக்க முடியாதவற்றை அன்பின் மூலம் சாதிக்க முடியும்

......

### இலங்கை,.

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

வரவேற்றது.

இக்கோஷ்டியில் திருவாளர்கள் என் ஆர் கோவிந்தசாமி, கே கணேசன், எஸ் ஆர் ஞானசுந்தரம், ஆர் சிவபாதம், என் ஆர் சின்னராசா, கே கணேசபிள்ளை ஆகியோர் இடம்பெற்றனர்

விமான நிலையத்திலிருந்து திரு கே பாலச்சந்தருடன் சங்கீத கலாநிதி சித்தூர் சுப்பிரமணியபிள்ளையும் வந்திருந்தார்.

தியேட்டர் அதிபர்களும் பிரமுகர்களும் சங்கீத வித்துவான் திரு ராம் குமாரசாமி ஆகியோரும் வந்திருந்தனர்

பலரும் பாலச்சந்தருக்கு மாலைசூட்டிக் கௌரவித்தனர்.

இன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் செல்வி சிவசக்தி சிவப்பிரகாசத்தின் நடன அரங்கேற்றத்தில் கலந்து கொள்ளவே திரு பாலச்சந்தர் ஈழம் வந்துள்ளார்.

......

### அவசரகால..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வாகமானாலும் அவசரகால நிலைமையையே பிரகடனப்படுத்தும், சில எதிர்க்கட்சி செனட்டர்கள் பொறுப்பற்று நடந்துகொள்கிறார்கள் என்றார்

செனட் அடுத்தமாதம் 4ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது' (சி பி ஏ)

### மாணவர் கருத்து கோரப்படும்

கோட்டை, திங்கள்

சமூக விரோத ஆபாச இலக்கிய இறக்குமதி தடை குறித்து அபிப்பிராயம் தெரிவிக்க கல்வியமைச்சு மாணவர்களுக்கும் சந்தர்ப்பம் அளித்துள்ளது.

சமூக விரோத ஆபாச இலக்கியங்களுக்குத் தடைவிதிப்பதுசம்பந்தமாகமாணவர்கள் மத்தியிலும் இருந்து அவர்களது அபிப்பிராயத்தைப் பெறுவதற்கு கல்வி கலாச்சார அமைச்சு நாட்டிலுள்ள பாடசாலைகளில் 155 பாடசாலைகளைத் தெரிவு செய்துள்ளது.



கோப்பாய் காரியாதிகாரி பிரிவில் விளையாட்டுபொறுப்பதிகாரி சிவப்பிரகாசபிள்ளையினதும் புலியிலக்எம் பட்டதாரியான அங்கை யற்கண்ணி சிவப்பிரகாசம் பிள்ளையினதும் புதல்வியுமான செல்வி சிவசக்தி, சுன்னாகம் இராமநாதன்கல்லூரி, இராமநாதன் இசைக்கல்லூரி ஆகியவற்றின் மாணவியும், இயல் இசை வாரி யாழ் ஸ்ரீ ந வீரமணிஐயரின் சிஷ்யையுமாவர்.

### தவறிவிட்டது

பான் விற்ற கணக்குக் கொப்பி மானிப்பாய் உடுவில் ரோட்டில் நேற்று தவறிவிட்டது. கண்டு எடுத்தவர்கள் S. ஞானமூர்த்தி தேநீர் கடை மானிப்பாய் அல்லது குணசிறி பேக்கறி மல்வம் உடுவில் என்ற விலாசத்தில் கொடுக்கவும், கண்டு எடுத்தவர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். 1274

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் பெரிய கோவில் வேதி வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டு மார்ச் மாதம் 3-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org